Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு

இல. 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0212219510 (C/1675)



முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 15 வெள்ளிக்கிழமை (31.08.2012) பக்கங்கள் 20 ஓசை – 334



அகிம்சையின் வெற்றி (05)



பெயர் மாறிய வீட்டுத்திட்டம் (06)



யார் தலைவன்? (11)



யாழ்.மாநகரில் கழிவகற்றல் (13)



ஒசாமா கொலை பற்றி... (18)

# இலங்கை மக்களே தீர்வை தீர்மானிப்பர்

## சர்வதேசம் அழுத்தத்தைத் தராது!



(கொழும்பு)

எமது நாட்டுக்கும், மக்களுக்கும் மிகவும் பொருந்தும் வகையிலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும். இவ் விடயத்தில் எமது அரசுடன் மிகுந்த புரிந்துணர்வுடன் தற்போது செயற்பட்டுவரும் சர்வதேச சமூகம் எந்தவிதமான அழுத்தங்களையும் பிரயோகிக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

மேலும், இலங்கை தொடர்பான சர்வதேச அபிப்பிராயம் தற்போது மாற்றமடைந்து வருகின்றது. இலங்கைக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த விசமத்தனமான பிரசாரங்கள் காரணமாக ஏற்பட்டிருந்த அவப் பெயர் தற்போது அகன்றுள்ளது. இலங்கையின் வட பகுதியில் உண்மையில் நடந்தது என்ன என்பது இப்போது சர்வதேச சமூகத்துக்கு நன்கு புரிந்துவிட்டது என்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அன்னதான மடத்தில் ரகளை இளைஞர் ஒருவர் படுகாயம்

(வடமராட்சி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த இரதோற்சவம் நேற்றுச் சிறப்பாக நடைபெற்ற நிலையில் ஆலயச் சூழலில் அன்னதானம் வழங்கும் மடத்தில் அடியவர் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றையதினம் சகல மடங்களிலும் பக்தர்கள் கூட்டம் அலைமோதியதால் குறித்த நபர் வரிசையில் நிற்காது இடையே சென்றமையாலேயே மடப்பணியாளர்களால் இவர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

இதில் மட்டுவிலைச் சேர்ந்த நிரஞ்சன் (வயது-36) என்பவரே தலையில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்ற அவமதிப்பு விவகாரம் ‘உதயன்’ ஆசிரியருக்கு எதிராக அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் சிரேஷ்ட சட்டத்தரணிகள் தமது சத்தியக் கூற்றுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றம், நீதிச்சேவை ஆணைக்குழு, நீதிபதிகள் சேவைச் சங்கம், சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும் தமது சத்தியக்கூற்றுக்களை ஜனாதிபதிக்கும் அனுப்பி வைத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் நீதித்துறைக்கு சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட இந்த சத்தியக் கூற்றுக்களின் பிரகாரம் நீதிச்சேவைச் சங்கத்தினால் உதயன் ஆசிரியருக்கு எதிரான கண்டன அறிக்கை வருகின்ற செப்ரெம்பர் 4 இல் முழுமையான அறிக்கை தயாரிக்கப்பட்டு நீதிச்சேவை, ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

உதயன் ஆசிரியரின் முழுமையான புலனாய்வு அறிக்கைகளையும், சத்தியக் கூற்றுக்களையும் சட்டமா அதிபர் திணைக்களம் தனது பரிசீலனையில் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. உதயன் ஆசிரியருக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்தியாவுக்கும் செல்கிறார் சீன பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியான் குவான்கிலி, இலங்கையிலிருந்து நாடு திரும்பும் வழியில் இந்தியா விற்கும் விஜயம் செய்ய உள்ளார்.

அண்டை நாடுகளுடன் நட்புறவைப் பேணும் நோக்கில் இந்த விஜயங்கள் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று நாட்கள் சீனப் பாதுகாப்பு அமைச்சர் இந்தியாவில் தங்கியிருப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## நில அதிர்வுகளின் மர்மம் என்ன? ஜப்பானிய குழு கொழும்புக்கு

(கொழும்பு)

இலங்கையில் ஏற்படுகின்ற சிறிய அளவிலான நில அதிர்வுகளின் மர்மங்கள் என்ன என்பது குறித்து ஆராய்வதற்காக ஜப்பானில் இருந்து விசேட குழு ஒன்று இலங்கை வரவுள்ளது. எதிர்வரும் வாரமளவில் இந்தக்குழு கொழும்புக்கு வரும் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தக் குழு நாட்டில் நில அதிர்வுகள் பதிவான பகுதிகளுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் கண்டன ஆர்ப்பாட்டம் உறவுகளைப் பிரிந்தவர்கள் திரண்டனர்

காணாமல் போனோர் தினத்தையொட்டி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மனிதாபிமான அமைப்புக்களின் ஏற்பாட்டில் வவுனியாவில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

வவுனியா பஸ் நிலையத்திற்கு முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் காணாமல் போனோர் தொடர்பான விவரங்களை அரசாங்கம் உடனடியாக வெளியிட வேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

காணாமல் போனோரின் உறவினர்கள் காலை 9.30 மணிக்கு வவுனியா - கண்டி வீதியிலுள்ள பௌத்த விகாரையில் வழிபாடுகளை முடித்துவிட்டு ஊர்வலமாக கண்டி வீதி வழியாகச் சென்று குடியிருப்பு பிள்ளையார் கோவிலிலும் இறம்பைக்குளம் அந்தோனியார் தேவாலயத்திலும் பஜார் வீதியிலுள்ள பள்ளிவாசலிலும் வழிபாடுகளில் ஈடுபட்டனர். பின்னர் இவர்கள் வவுனியா பஸ் நிலையத்தை வந்தடைந்து ஆர்ப்பாட்டத்தில் இணைந்துகொண்டனர்.


## விதிமுறை தவறிய நடவடிக்கையால் வலி.தெற்கு பிரதேசசபையில் குழப்பம்

(சுன்னாகம்)

உள்ளூராட்சிச் சபைகளின் அதிகார வரம்புகள் பற்றிய தெளிவான அறிவு இன்மையால் வலி.தெற்குப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வில் குழப்பநிலை ஏற்பட்டது. இக் குழப்ப நிலை காரணமாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபை அமர்விலிருந்து வெளியேறினர்.

மேற்படி பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்றுக்காலை 9.30 மணியளவில் சபையின் கேட்போர் கூடத்தில் ஆரம்பமா

(19) ஆம் பக்கம் பார்க்க



நேற்றைய தினம் கிளிநொச்சிக் கந்தன் தேரேறிப் பவனி வந்தபோது...

## அவுஸ்ரேலியா மோகம் வன்னி மக்களை உலைக்கிறது

போருக்குப் பின்னர் மீள்குடியேற்றத்துடன் அபிவிருத்தி கண்டு வரும் வன்னிப் பிரதேசத்திலிருந்து பலர் படகுகள் மூலம் அவுஸ்ரேலியாவுக்குச் செல்ல முற்பட்டுள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்ட இந்தப் பகுதி மக்கள் தற்போது ஓரளவுக்கு தமது வாழ்வைச் சீரமைத்து படிப்படியாக முன்னேறி வருகின்ற நிலையிலும், படகு மூலம் அவுஸ்ரேலியா சென்றுவிட முடியும் என்ற ஆசை வார்த்தைகளை நம்பி படகுப்பயணத்தில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

கிளிநொச்சி நகரிலுள்ள சில வர்த்தகர்களும் இவ்வாறு படகு மூலம் அவுஸ்ரேலியாவுக்குப் பயணமாகியிருப்பதாக அந்தப் பகுதி வர்த்தகர்கள் சிலர் தெரிவித்தனர்.

கிளிநொச்சி நகரில் சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றை நடத்தி வந்தவர் அண்மையில்

(19) ஆம் பக்கம் பார்க்க

# வீதியில் மீன் வியாபாரம் கெட்டுப்போகும் சுற்றுச்சூழல்

## நல்லூர் பிரதேச சபைக்குத் தலையிடி



(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பல வீடுகளுக்கு முன்பாகவும் மற்றும் பல இடங்களிலும் நடமாடும் மீன் விற்பனையில் ஈடுபடும் மீன் வியாபாரிகள் அந்தந்த இடங்களிலேயே வைத்து மீன்களை வெட்டி வியாபாரம் செய்வதினால் அவற்றின் செதில்கள், வால்கள், தலைகள் என்பன வீதியில் சிதறிக் கிடக்கின்றன என உறுப்பினர் ஒருவர் நல்லூர் பிரதேச சபையின் கூட்டத்தின் போது சுட்டிக்காட்டினார்.

காகங்கள் மற்றும் பறவைகள் இவற்றைக் கொத்திச் சென்று கிணறுகளுக்குள்ளும் மற்றும் முக்கிய இடங்களிலும் இவற்றைக் கொட்டுவதால் பல இடங்கள் அழுக்கடைந்து காணப்படுவதுடன் சுகாதாரச் சீர்கேட்டுக்கும் காரணமாக அமைகின்றது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

வீடுகளுக்கு முன்பாக மீன்கள் வெட்டப்படுமானால் அவற்றின் கழிவுகளை வீட்டுக்காரர்கள் அவற்றின் வீட்டு வளவுகளுக்குள் வெட்டிப் புதைத்து விடுவதே மேலானதாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி நடவடிக்கை எடுப்பது என நல்லூர் பிரதேச சபை தீர்மானித்தது. (137)

# 'வீரியம்' ஆரம்ப நிகழ்வு

(குருநகர்)

குருநகர் நாட்டுக் கூத்து மன்றம் நடத்தும் ஆளுமை வீடியோ திரைப்பட வெற்றி விழாவும் 'வீரியம்' புதிய வீடியோ பட ஆரம்ப நிகழ்வும் இன்று மாலை 5.00 மணிக்கு 20, கடற்கரை வீதி மன்ற பணிமனையில் நடைபெறும்.

மன்றத் தலைவர் கலைமாமணி கிறகரி கிறிஸ்தோப்பர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராகவும், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்பணி ஆர்.சி.எக்ஸ்.நேசராசா அடிகளார் ஆசியுரை வழங்குவார். (68)

# காசோலை மோசடி கோப்பாய் வாசிக்கு வழக்கு

(திருநெல்வேலி)

காசோலை மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் நேற்றுப் பிணையில் செல்ல அனுமதித்தது.

கோப்பாயைச் சேர்ந்த ஒருவர் 4 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை கடந்த மே மாதம் 10 ஆம் திகதியன்று இன்னொருவருக்கு வழங்கியிருந்தார். இக்காசோலையைக் குறிப்பிட்ட வங்கியில் அவர் வைப்பிலிட்ட போது பணமில்லையென வங்கியினால் தெரிவிக்கப்பட்டு அது திரும்பியது.

இதுபற்றி காசோலையைப் பெற்று ஏமாந்த நபர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். விசாரணையை மேற்கொண்ட யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர் பணம் இல்லாத காசோலையைக் கொடுத்த நபரை யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இவரை 15 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், 2 இலட்சம் ரூபாவுக்கான இரண்டு ஆட்பிணையிலும் செல்வதற்கு அனுமதித்த நீதவான் மா.கணேசராஜா பிணையாளிகளில் ஒருவர் அரச உத்தியோகத்தராக இருக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (137)

## கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிற்கும் எதிர்வரும் 07.09.2012 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நடைபெறவிருந்த செப்ரெம்பர் மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புச் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதையும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்பதையும் யாழ். சுகாதார சேவை பணிமனை அறிவித்துள்ளது.




நீர்வேலி றோ.க.த.க பாடசாலையில் நடைபெற்ற பரிசுத்தின விழாவின்போது மேடையேற்றப்பட்ட காத்தவராயன் சிந்துநடைக் கூத்தில் பங்குபற்றிய மாணவர்கள் பாடசாலை அதிபர் மற்றும் இசைக்கலைஞர்களுடன் காணப்படுவதையும், இச்சிந்துநடைக் கூத்தினை நெறியாள்கை செய்த சங்கீத ஆசிரியை திருமதி ஹேமநந்தினி தூயகுமாரன் கல்லூரி சமூகத்தால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் காணலாம். இச்சிந்துநடைக் கூத்து வலய மட்ட தமிழ்த் தினப் போட்டியில் மூன்றாம் இடத்தினைப் பெற்று பலரது பாராட்டுப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (03)

## பொற்பதி சனசமூக நிலைய கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பொற்பதி சனசமூக நிலையத்திற்கான புதிய கட்டடத்தின் திறப்பு விழா இன்று கோலாகலமாக இடம்பெறவுள்ளது.

மதியம் 12.00 மணியளவில் இடம்பெறவிருக்கும் விழாவில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந் தினர்களாக நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் த்லைவரும் அப்பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான அ.இரவீந்திரதாசன் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# நிதி வழங்க நேர்முகத் தேர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கும் செயற்திட்டத்துக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நேர்முகத் தேர்வுக்கு வருகை தரும் மாணவர்கள் உதவிப்பணம் பெறுவதற்குரிய நியாயப்படுத்தப்படும் ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறும் நேர்முகத் தேர்வுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு தபால் மூலம் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் கிடைக்காத மாணவர்கள் 0212290031 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியத் தலைவரும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருமான நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (04)

# புதிய நிர்வாகத் தெரிவு


(மருதங்கேணி)

வத்திராயன் கிராமத்திற்கான 2012 ஆம் ஆண்டுக்கான கிராமிய அபிவிருத்தி அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் வத்திராயன் கிராம பொது மண்டபத்தில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

இவ் ஆண்டிற்கான தலைவராக வீ.எஸ்.சிறிஸ்காந்தராசா, உபதலைவராக எஸ்.பி.தங்கவேலு, செயலாளராக முரளிதரன், உப செயலாளராக ந.ஞானேஸ்வரன், பொருளாளராக தி.செல்வராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தொடர்ந்து உபகுழுக்களான வாழ்வாதாரக் குழு, உட்கட்டுமானக் குழு, கொள்வனவுக்குழுக்கள் உட்பட நிர்வாகக் குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டன.

இந்நிகழ்வில் மீள்எழுச்சித் திட்டத்தின் பணிப்பாளர், கிராம அலுவலர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (38)



வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மண்டைதீவுக்கான மின்சார விநியோகத்திற்கான கம்பங்கள் நாட்டப்பட்ட வேளை முதல் மின்சாரக் கம்பத்தினை வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவாராசா (போல்) மின்சார சபையின் ஊழியர்களுடன் நிறுத்தி ஆரம்பித்து வைப்பதைக் காணலாம். (5,85)

## கைதிகள் தினத்தில் கைதிகளை சந்திக்கலாம்

கைதிகள் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 9 ஆம் திகதி யாழ். சிறைச்சாலையில் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் கைதிகளை, அவர்களது உறவினர்கள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் ஆர்.எம்.சென்ரத் பண்டார தெரிவித்துள்ளார்.

அத்துடன் யாழ் சிறைச்சாலை கைதிகளால் அமைக்கப்பட்ட பனை கைப்பணிப் பொருட்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நூலகர்களுக்கு பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)



வடமாகாண பொது நூலக நூலகர்களுக்கான பயிற்சிப் பட்டறை நேற்றுக் காலை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில், ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் சிரேஷ்ட பணிப்பாளர் எஸ்.அன்ரனி நல்லதம்பி, யாழ். மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன், ஏசியா பவுண்டேசன் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.சிவநாதன், கொழும்பு பொது நூலகர் வாருனி கலாபரஜி மற்றும் யாழ். பொது நூலகர்கள் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதனை ஏசியா பவுண்டேசன் நிறுவனம் மற்றும் ஸ்ரீலங்கா ரெலிகொம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

# சிவில் பாதுகாப்பு பிரதிநிதிகளை சந்திக்க மனித உரிமை ஆணைக்குழு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் அடுத்த மாத நடுப்பகுதியில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு ஒன்றை மேற்கொள்ள இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் காரியாலயம் நடவடிக்கை எடுத்து வருவதாக அதன் இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ். சிவில் அமைப்புக்களுடனான கலந்துரையாடலொன்றை கடந்த 9 ஆம் திகதி யாழ். கிறீன்கிறாஸ விடுதியில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயம் நடாத்தியிருந்தது. இதன்மூலம் சிவில் அமைப்புகளிடம் இருந்து பல ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பெற்றுக்கொண்டிருக்கும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு, கிளிநொச்சி மாவட்டத்திலும் அடுத்தமாத நடுப்பகுதியில் அத்தகைய சிவில் அமைப்புகளுடனான சந்திப்பை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

தற்சமயம் கிளிநொச்சி மாவட்டத்தில் செயற்பட்டு வரும் சிவில் அமைப்புக்கள் தமது பதிவு நடவடிக்கைகளை இலங்கைக்கான மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயத்தில் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிககப்பட்டுள்ளது.

இநதப் பதிவுகளை இதுவரை மேற்கொள்ளாத சிவில் அமைப்புக்கள் தமது பதிவுகளை மேற்கொண்டு நடைபெறவிருக்கும் சந்திப்பில் கலந்து கொள்ள முடியும் என்று அதன் யாழ். காரியாலய அதிகாரி ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

(பா)

## இரத்த மாதிரி அறிக்கை மாயம்

(குருநகர்)

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த பரிசோதனை நிலையத்தில் சோதனைக்காக வழங்கப்பட்ட இரத்த மாதிரியின் அறிக்கை மற்றும் பெறப்பட்ட இரத்தம் அதனைப் பெறுவதற்கான பதிவு என்பன இல்லாமல் மாயமாக மறைந்து விட்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது.

யாழ். கச்சேரி கிழக்கைச் சேர்ந்த சிவகுரு கணநாதபிள்ளை கடந்த 24 ஆம் திகதி கிளினிக் வைத்திய அதிகாரியின் அறிக்கையுடன் சென்று அவரது பெயர் சுட்டிலக்கம் பொறிக்கப்பட்ட சிட்டி ஒன்றில் இரத்தம் வழங்கி இருந்தார்.

27 ஆம் திகதி வைத்திய பரிசோதனைக்குச் செல்கையில் இரத்த பரிசோதனையைப் பெறச் சென்றபோதே 20 ஆம் இலக்க அறையில் சோதனை முடிவு இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இரத்தம் வழங்கிய பரிசோதனை நிலையத்தில் விசாரித்ததில் இவரது பதிவு பதிவேட்டில்கூட இல்லை என கைவிரிக்கப்பட்டுள்ளது. (68)

## நயினாதீவு விவசாயிகளுக்கு மானிய விலையில் கையுழவு இயந்திரம்

(நயினாதீவு)

நயினாதீவு விவசாய சம்மேளனத்தின் வருடாந்த கூட்டம் நேற்று முன்தினம் நயினாதீவு தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

நயினாதீவு விவசாய சம்மேளனத்தின் கீழ் நயினாதீவு சம்மேளனம், நயினாதீவு தெற்கு சம்மேளனம் என்பன இயங்கி வரும் நிலையில் நயினாதீவு சம்மேளனத்தில் 60 உறுப்பினர்களும், நயினாதீவு தெற்கு சம்மேளனத்தில் 165 உறுப்பினர்களும் உள்ளனர்.

மேலும் கமநல சேவைத் திணைக்களத்தினால் நயினாதீவு விவசாயிகளுக்கு மானிய விலையில் ''லான்மாஸ்ரர்'' (கையுழவு இயந்திரம்) வழங்கப்பட்டது.

நயினாதீவு தெற்கு சம்மேளனத்திற்கு ஒரு உழவு இயந்திரமும், நயினாதீவு சம்மேளனத்திற்கு இரு உழவு இந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. இதனால் கூடிய உறுப்பினர்களைக் கொண்ட சம்மேளன விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை 60 உறுப்பினர்களைக் கொண்ட நயினாதீவு சம்மேளனத்தில் இரண்டு உழவு இயந்திரங்கள் அரச உத்தியோகத்தர்களுக்கே மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளதாகவும், இது விதிமுறைகளுக்கு மீறிய செயற்பாடு எனவும் விவசாயிகளால் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நயினாதீவு தெற்கு சம்மேளனத்தின் புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (175)

## 16 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

(சாவகச்சேரி)

யாழ். மாவட்டச் செயலக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் பாவனையாளர் பாதுகாப்பு விதிகளை மீறிய தென்மராட்சி பிரதேச வர்த்தகர்கள் 16 பேருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இதில் குறித்த விலையை விட அதிகரித்த விலையில் பொருட்களை விற்பனை செய்தமை காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை விலைப் பட்டியல் காட்சிப்படுத்தாமை போன்ற குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக குறித்த வர்த்தகர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்குத் தொடர்பாக 16 வர்த்தகர்களும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நீதவான் முன்னிலையில் ஆஜராகும் வகையில் அழைப்பாணை கட்டளைகள் அனுப்புமாறு நீதிமன்ற பதிவாளருக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (11)

## செல்வச்சந்நிதி முருகனுக்கு இன்று தீர்த்தோற்சவம்



சடாமுடியுடைய சடையானின் மகனே
ஐம்பொறி பாயும் ஐங்கரன் தம்பியே
தினம்தினம் அருள்புரியும் திருமாலின் மருமகனே
வள்ளலை பாடும் வள்ளி நாயகியின் மணவாளனே
கையில் வேலினை உடைய வேற்படை யானே
உமை நாடி வருவோரை செல்லமாக - அழைத்து
அருள் கொடுக்கும் செல்வச்சந்நிதியானே.

வி.கோகிலன், நெடுந்தீவு -13




## பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)


தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் (NAITA) கிளிநொச்சி மாவட்டத்தில் பின்வரும் பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதில் கணினி வன்பொருள் திருத்துநர் கற்கை நெறி (Computer Hardware) 6 மாதம் (தகைமை - தரம் 9 சித்தி), கணினி அனுமதிப் பத்திர கற்கை நெறி (SLCDL) 3 மாதம் (க.பொ.த.சா.த சித்தி), பிரததியேக செயலாளர் (Personal Seceratary - 9 மாதம்) (க.பொ.த.சா.த சித்தி), வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல், குளிரூட்டி திருத்துதல் (Multiskill) 6 மாதம் (தகைமை - தரம் 8 சித்தி) ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16 வயது தொடக்கம் 35 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுக் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர் NAITA ஆனந்தபுரம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலமாகவோ அலலது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்வதுடன், காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியை தவறாது குறிப்பிடல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 0343942824, 0212285615 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக கொள்ளப்பட்டுள்ளது.



வடமாகாண திட்டமிடல் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களால் 2012 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட, முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண சபையின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ் தலைமையில் நடைபெற்றபோது, துறைசார்ந்த அதிகாரிகள் கலந்துரையாடுவதைக் காணலாம்.
(படம்: கே.நந்தகுமார்)

*சில அறங்களில் ஆண்களை விட பெண்கள் சிறந்தவர்களாக இருக்கின்றனர். அந்த அறங்களில் அஹிம்சையும் ஒன்று.*
*- மகாத்மா காந்தி.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## படகேறுதலும் படுகுழி அரசியலும்!

கிளிநொச்சியில் காணிகள், வீடுகளின் விலை குறைந்து வருகிறது என்றார் நண்பர். அது கொஞ்சம் விசித்திரமாக இருந்தது. கிளிநொச்சி அபிவிருத்தியடைந்துவரும் வேகத்தைப் பார்க்கும் எவருக்கும் அங்கு காணிகள், கடைகளுக்கான இடங்கள் நெருப்பு விலையாக இருக்கும் என்று தோன்றுவதில் வியப்பில்லை. இலங்கையிலேயே மிக நீண்ட கடைத்தெருக்களைக் கொண்ட பெரிய நகராக கிளிநொச்சியின் பாரிய வளர்ச்சி கண்முன்னால் தெரியும்போது, அங்கே வீடுகள் கடைகளின் விலை மலிவதற்கு காரணம் என்ன?

காரணத்தை அறிந்தால், அது நம் நாட்டின் தற்போதைய மற்றொரு விசித்திரமாக விரிகிறது. கிளிநொச்சியில் கடைகள் பூட்டப்பட்டுக் கிடக்கிறது. காரணம் கேட்டால் அவர்கள் இருப்பதையெல்லாம் விற்றுவிட்டு அவுஸ்ரேலியாவுக்குப் படகேறிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த அவுஸ்ரேலியப் படகேற்றத்திற்காகவே பலர் வீடுகளையும் கடைகளையும் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதுவே விலை மலியக் காரணம் என்று சொல்கிறார்கள்.

அரசியல் தலைவர்களைத் தவிர மக்கள் எல்லோருமே இது பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கடற்கரை உள்ள ஊர்களிலிருந்தெல்லாம் படகுகள் புறப்படுவதாகத் தினமும் கதைகள் வருகின்றன. இது ஒன்றும் சுகமான பயணம் அல்ல; உயிரை வெறுத்த பயணம். ஆனாலும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். நேற்றும் இந்தோனேசியாவுக்கு அருகே 150 பேருடன் படகு மூழ்கியதாகச் செய்தி வந்திருக்கிறது. பிடிபடுகிறார்கள், சிறைக்குப் போகிறார்கள், கடலில் மூழ்கிப் பலர் இறந்தும் போகிறார்கள். ஆனாலும் இருப்பதையெல்லாம் விற்றுச்சுட்டுக் காசைக் கட்டி வெளிநாடுகளுக்குப் படகேறுகிறார்கள். குறிப்பாக இளைஞர்கள்!

இதன்மூலம் உருவாகிக் கொண்டிருக்கும் சமூக இழப்பு பற்றி, தமிழர்களுக்காக வாய்கிழிய வசனங்கள் பேசும் தலைவர்கள் எவரும் அக்கறைப்படுவதாகக் காணோம். அவர்கள் கிழக்குத் தேர்தலையும் வென்று சர்வதேசத்திற்கு இன்னும் ஒருதடவை தமிழொற்றுமையைக் காட்டிவிடும் மாயையில் மூழ்கிக் கிடக்கிறார்கள். அல்லது இப்படியே பலரும் வெளியேறிப்போய், புலம்பெயர்ந்த தமிழர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது தேர்தல் வெற்றிகளுக்கு வாய்ப்பானது என்று இரகசிய ஆசை கொண்டிருக்கிறார்களோ என்னவோ!

சுயலாப நினைவுகளிலேயே மூழ்கியிருந்தால், மக்கள் சாவதும் தெரியாது; இருக்கும் உரிமைகளையும் இழந்துகொண்டிருப்பதும் தெரியாது. நாடாளுமன்றத்திற்கு வன்னி தேர்தல் மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் ஒன்று குறைய இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் கடந்த ஆண்டு யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை பத்திலிருந்து ஆறாக குறைக்கப்பட்டது. இப்போது வன்னியிலும். ஆக மொத்தம், தமிழ் மக்கள் அதிகமாக உள்ள வடக்கின் தேசிய அளவிலான நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் ஐந்து குறைந்துள்ளது.

புலம்பெயர் மக்களின் காசையும், இங்குள்ள வாக்குகளை எடுத்துத்தரும் ஆதரவையும் வேண்டிநிற்பதொன்றே இந்தத் தலைவர்களின் அரசியலாக இருக்கிறது. தமிழ் இளைஞர்களின் இந்த வகைதொகையில்லா வெளியேற்றம் இங்கு எதை மிச்சப்படுத்தும்? நமது மனிதவள இழப்புப் பற்றியோ எதிர்காலம் பற்றியோ கவலையேதும் படாத தலைவர்களையே தேர்தல்களில் தெரிவுசெய்து கொண்டிருக்கிறது தமிழ்ச்சமூகம்.

இப்படிக் கள்ளத்தோணிகளில் வந்திறங்குபவர்களுக்கு குடியுரிமை வழங்கப்போவதில்லை; தனித்தீவில் கைதிகளாகத்தான் வைத்திருக்கப் போகிறோம் என்று அவுஸ்ரேலியப் பிரதமர் அறிவிக்கிறார். தமிழ்த் தலைவர்கள் எனப்படுவோர் இப்போதும் “சர்வதேசம் தீர்வை எடுத்துத் தரும்” வசனத்திலேயே உழன்று கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குச் சுயமரியாதை கூடவா இல்லை?

- ஆசிரியர்

# பெண் சட்டத்தரணியைத் தாக்கிய மனநோயாளிக்குப் பிணை

நீதிமன்ற வளாகத்தில் வைத்து பெண் சட்டத்தரணியைத் தாக்கிய மனநோயாளிப் பெண் யாழ். நீதவான் நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கடந்த 23ஆம் திகதி வியாழக்கிழமை விவாகரத்து வழக்கு ஒன்றுக்காக நீதிமன்றுக்கு வந்திருந்த இப்பெண் தனது சார்பில் வாதாடிய சட்டத்தரணியைக் கன்னத்தில் அறைந்து தாக்கியிருந்தார்.

உடனடியாக இவரைக் கைது செய்ய உத்தரவிட்ட நீதவான் மா. கணேசராசா தெல்லிப்பழை வைத்தியசாலையில் இவரை அனுமதித்து மனநல வைத்திய நிபுணரின் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கட்டளையிட்டார்.

நேற்று முன்தினம் இப்பெண் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது இவர் சார்பில் ஆஜரான சட்டத் தரணிகளான மு. றெமிடியஸ், ஷர்மினி விக்னேஸ்வரன் ஆகியோர் இப்பெண் மனநலம் குன்றியவர் எனவும், வேண்டும் என்றே சுயநினைவுடன் பெண் சட்டத்தரணியைத் தாக்கவில்லை எனவும், மனிதாபிமான முறையில் இவரைப் பிணையில் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும் எனவும் கோரினர்.

நீதவான் மா. கணேசராசா இப்பெண்ணை 40 ஆயிரம் ரூபாவுக்கான இரண்டு தனித்தனி ஆட்பிணையில் செல்ல உத்தரவிட்டார். (137)

## கோழிக் கள்வர் மாசேரியில் அதிகரிப்பு

(வரணி)

வரணி-மாசேரிப் பகுதியில் கோழிக் கள்வர்கள் அதிகரித்துள்ளனர். கடந்த சில நாட்களுக்கு முன்பு மாசேரியைச் சேர்ந்த க.பொன்னையா என்பவரது வீட்டில் கூட்டில் இருந்த கோழிகளை திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

மீண்டும் அதே வீட்டில் கடந்த வாரம் இரவுவேளை நுழைந்த திருடர்கள் எஞ்சியிருந்த கோழிகளையும் திருடிச் சென்றுள்ளனர். இத்திருட்டுப் பற்றி வீட்டு உரிமையாளர் தெரிவிக்கையில், இனி இந்த ஊரிலே கோழியே வளர்ப்பதில்லை என்று கவலை தோய்ந்த முகத்துடன் கூறினார். (150)

## எப்போது ஒளிரும் வீதி விளக்கு

வடக்கு வரணி கறுக்காய் சந்தியில் அ.த.க. பாடசாலை வாசல் மற்றும் வர்த்தக நிலையம்,பேருந்து தரிப்பிடம் போன்ற முக்கிய இடத்தில் இருக்கும் வீதி விளக்கு மிக நீண்ட நாட்களாக பழுதடைந்துள்ளதைக் காணக் கூடியதாகவுள்ளது.

மிக முக்கியமான இடத்தில் உள்ள இவ் ஒளி விளக்கை உரியவர்கள் திருத்தம் செய்து தருமாறு பயணிகள் மற்றும் பொது மக்கள் கோருகின்றனர். (150)

## மின்சாரம் வழங்க விரைவான செயற்பாடு

(வேலணை)

வடக்கின் வசந்தம் வேலைத திட்டத்தின் கீழ் மண்டைதீவு கிராமத்திற்கான மின்சார இணைப்பு விநியோக வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கை மின்சார சபையின் வடக்கின் வசந்தம் திட்டத்திற்கான எந்திரி குணசீலனின் ஏற்பாட்டில் எந்திரி சி.எச். வீரசேகராவினது நேரடிக் கண்காணிப்பில் வேலைகள் விரைவாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (05)

## வடிகாலமைப்பு நிர்மாணம்

(அச்சுவேலி)

அச்சுவேலி பேருந்து தரிப்பு நிலையத்தை அண்டிய நகர்ப் பகுதியில் அமைக்கப்பட்டு வந்த வடிகால் அமைப்புத் தொகுதியின் நிர்மாணப் பணிகளின் ஒரு பகுதி நிறைவடைந்துள்ள நிலையில் ஏனைய பகுதிகளுக்கான பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நகர்ப்பகுதியை அண்மித்து சுமார் ஐந்நூறு மீற்றர் தூரம் கொண்ட இவ் வடிகால் தொகுதி வீதியின் இரு மருங்கிலுமாக அமைக்கப்பட்டு வருவதுடன், இவற்றுடன் தொடர்புடையதாக நீர் வழிந்தோடக்கூடிய வகையில் மதகுகளும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இதேவேளை, இவ்வடிகால் அமைப்பு நிர்மாணப் பணிகளிற்கு சில கடை உரிமையாளர்கள் தமது முழுமையான ஒத்துழைப்பினை வழங்காது கடைத் தொகுதிகளை பின் நகர்த்த மறுத்து வருவதால் மேற்படி பகுதிகளில் வேலைகளை நிறைவு செய்வதில் நெருக்கடி நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (03)

## குடிநீர்க்கிணறு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் குடிநீர்த் தேவையை நிவர்த்தி செய்யும் முகமாக 5 ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 42 அடி ஆழமான குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

இதனால், மாணவர்கள் குடிநீரை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பதாக பாடசாலை அதிபர் செந்தில் வேல் தெரிவித்துள்ளார். (109)

# கல்விப் பணிப்பாளரின் நடவழக்கை; ஆசிரியர் சங்கம் கண்டனம்

(நெடுங்கேணி)

ஆசிரியரின் இடமாற்ற விண்ணப்பப் படிவத்துடன் லீவு விபரம் இணைக்கப்பட வேண்டும் என துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் கூறுவதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த வெள்ளிக்கிழமை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், இலங்கை ஆசிரியர் சங்கம், தமிழர் ஆசிரியர் சங்கம் மற்றும் அதிகாரிகள், பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று வடமாகாண இடமாற்றம் பற்றிய சுற்றுநிருபம் ஒன்றைத் தயாரித்துள்ளது. இச்சுற்றுநிருபம் காலக்கிரமத்தில் அனைத்து வலயத்திற்கும் அனுப்பிவைக்கப்படும்.

ஆனால், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் தேசிய இடமாற்றக் கொள்கைக்குப் புறம்பான வகையில் நடக்கின்றார். இடமாற்றச் சபைகளே ஆசிரியரின் இடமாற்றம் தொடர்பான தீர்மானம் எடுக்க முடியும். தனியாக வலயக் கல்விப் பணிப்பாளர் எடுக்க முடியாது. இவரின் நடவடிக்கை தொடர்பாக வடமாகாண மற்றும் ஆளுநரின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (12)

## பொதுக்கூட்டம்

(நெடுங்கேணி)

அதிவணக்கத்திற்குரிய கலாநிதி அம்பலவாணரின் ஞாபகார்த்தமாக ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் இல்லங்களின் நிதியத்தின் பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். நூலக சிற்றுண்டிச்சாலை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

ஏ. பிறேமானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு, சிறுவர் இல்லங்களின் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும், புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற உள்ளதாகவும் செயலாளர் அறிவித்துள்ளார். (12)

## தென்னங்கன்றுகள் விநியோகம்

(வரணி)

வரணி வடக்கு கப்ருக சங்கத்தினால் சங்க அங்கத்தவர்கட்கு கடந்த செவ்வாய்க்கிழமை வடக்கு வரணிச் சந்தியில் வைத்து ஒவ்வொரு பயனாளிகளுக்கும் ஐந்து தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இச்சங்கத்தில் இணைய விரும்புவோர் நூற்றிப்பத்து ரூபாவினை அங்கத்தவர் பணமாகச் செலுத்தி தென்னங்கன்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பல பொதுமக்கள் தற்போது புதிதாகப் பணம் செலுத்தி அங்கத்தவராக இணைந்து தென்னங்கன்றுகளைப் பெற்றுச் செல்கின்றனர். (150)

# அகிம்சையின் வெற்றி

- நரோபா

**ஆயுதப் போராட்டங்கள் ஒரு போராட்டத்தின் காரணங்களை உயர்த்திக் காட்டி உலகக் கவனத்தைப் பெறலாம், ஆனால் அவை இலக்கை அடைய உதவுவதில் அத்தனை பயனற்றவை.**

“அகிம்சைக் கொள்கை காலாவதியாகி விட்ட நம்பிக்கைகளின் போராட்டம். ஏதோ ஒரு வரலாற்றுக் காலகட்டத்தில் வாழ்ந்த இளகிய மனம் கொண்ட இளிச்சவாய் எதிர் தரப்பினருக்கு எதிராக அது வேலை செய்துள்ளதே தவிர, அதை இன்றும் சுமந்துகொண்டு செல்வது அபத்தம். மேலும் அது வீரர்களின் வழியல்ல,உண்மையில் அது ஆண்மை யற்ற .போராட்ட முறை. ஆகவே அதைக்கொண்டு எந்தப் பிரச்சினையையும் தீர்த்திட முடியாது”

இது போன்ற குரல்கள் தெருமுனை டீ கடை முதல் தொலைக்காட்சி விவாதங்கள் வரை மீண் டும் மீண்டும் ஒலித்துக்கொண்டுதான் இருக்கின் றன. ஆனால் இத்தகைய கருத்துகளை முன்வைப் பவர்கள் அதன் பின்புலமாக எந்த ஆதாரங்களை யும் சுட்டுவதில்லை.

வன்முறையைத் தவிர்க்கும் அமைதிவழி எதிர்ப் புகள், குடிமக்கள் சமுதாயத்தின் எழுச்சிகள், ஒத் துழையாமை இயக்கங்கள் ஆகியன வரலாற்றில் என்ன பங்கு வகித்திருக்கின்றன, என்னமாறுதல் களைக் கொணர்ந்திருக்கின்றன, எங்கெல்லாம் அவை முழுத் தோல்வியைச் சந்தித்து ஒழிக்கப் பட்டிருக்கின்றன என்பனவெல்லாம் முறையான சோதனைக்கோ, ஆய்வுக்கோ ஆட்படுத்தப்பட வில்லை என்பதே மேற்படி விவாதங்களுக்கு ஒரு தடைக்கல்.

அதற்கப்பால், அத்தகைய முயற்சிகள் தேவை இல்லை, உண்மை என்னவோ தெளிவாகத் தெரி கிறது, ஆயுதம் தாங்கிப் புரட்சி செய்யாத மக் களால் எதையும் சாதிக்க முடியாது, மாறாக ஆயு தப் புரட்சிகளெல்லாம் இறுதியில் வெல்கின்றன என்பது போன்ற ஒரு கருத்து சகஜமாக எதிர்ப் பில் இறங்குபவர்களிடையேயும்,வன்முறை எழுச்சி களையே அரசியலாகக் கொண்டவர்களிடமும் இருப்பதை நாம் எங்கும் காண்கி றோம். அது தற்செயல் இல்லை.

கடந்த இரு நூறாண்டு களுக்கும் மேலாக அதையே ஐரோப்பிய கருத்தியலில் ஒரு சாரார் தொடர்ந்து முன்னிறுத்தி வந்திருக் கின்றனர். அந்தக் கருத் தியல் பல நாடுகளிலும் தோற்றி ருந்த போதும், அவை கணக்கிலெடுக்கப்படா மல் தோற்றது சில சூழ்நிலைகளால், அந்தப் பாடங்களை மனதில் கொண்டு, மறுபடி சமுதாயத்தைப் புரட்டிப் போட்டால், வன்முறைப் போராட்டமே வெல்லும் என்ற கருத்து சர்வ நிச்ச யமாக நம்பப்படுகிறது. இந்த வாதம், தோல் வியைக் கணக்கிலெடுக்க வேண்டாம், வெற்றி மட்டுமே கணக்கிலெடுக் கப்பட வேண்டும் என்ற ஒரு அணுகல்,வன்முறை யற்ற போராட்டங்களுக் கும் பொருத்தப்படலாமே என்றால் அதைக் கருதி யோசிக்க ஆட்களில்லை.

இதெல்லாம் கூட வியப்பைத் தரத் தேவை யில்லை. வியப்பு எங் கென்றால், இதைப் பல நாட்டு அரசுகளும், அரசு அதிகாரிகளும் நம்புகிறார்கள், பல நாடுகளில் உள்ள பல்கலை ஆய்வாளர்களும், அறிவு ஜீவி களும், ஊடகங்களில் நாயகத் தன்மையோடு விளங்குவோரும் கூடநம்புகிறார்கள் என்பது தான் விசித்திரம்.

இந்தச் சூழலில் அண்மையில் எரிக்கா செனோவெத் மற்றும் மரியா ஜெ ஸ்டீ.்.பன் இருவரும் இணைந்து மேற்கொண்ட ஆய்வு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. 1990 ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை உலகெங்கிலும் நடைபெற்ற 323 சமூகப் போராட் டங்களை ஆய்வு செய்து சில முக்கியமான முடிவுகளை வெளிப் படுத்தியுள்ளனர்.

எரிக்கா அரசியல் பல்கலைப் பேராசிரியர். சர்வதேச பாதுகாப்பு, பயங்கரவாதம், உள்நாட்டுப் போர் மற்றும் தற்காலப் போர்கள் ஆகிய விடயங்களைப் பாடங்களாகக் கற்பிக்கும் பேரா சிரியராக உள்ளார்.அகிம்சை வழிமுறையைச் சந்தேகத்தோடு அணுகும் அனேக அறிவு ஜீவி-களைப் போல்தான் தானும் சமீப காலம் வரை இருந்ததாக ஒத்துக் கொள்கிறார்.

ஜனநாயகம் தீவிரவாதத்திற்கு மாற்று என்ற புஷ் அரசாங்கத்தின் கொள்கையை அடித்தளமாகக் கொண்டு ஆய்வு செய்தார். தீவிர வாதத்தைப் பெரிய அளவில் ஜன நாயகம் பாதிக்கவில்லை என்பதே அவரது ஆய்வு முடிவாக இருந் தது. வன்முறை மூலம் தங்கள் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வர முடியும் என்று மக்கள் நம்பு வதாகவே அவரும் எண்ணினார்.

இந்தச் சூழலில் அகிம்சை போராட்ட வழிமுறை களை ஆய்வு செய்துவரும் மரியா ஸ்டீ.்.பன் நடத்திய ஒரு வகுப்பில் அவர் பங்கெடுக்கிறார். மரியா அதில் நிகழ்த்திய உரையை அவர் கேட்க நேரிட்டது ஓர் முக்கியமான திருப்புமுனை. பிலிப்பைன்ஸ், செர்பியா போன்ற தேசங்களில் பல ஆண்டுகால ஆயுதப் போராட்டங்கள் சாதிக்க முடியாததை அகிம்சைப் போராட் டங்கள் வென்றெ டுத்ததை அவர் விளக்கியதை எரிக்காவால் முழுமை யாக நம்ப முடிய வில்லை. அந்த வகுப்பின் இறுதி யில், ஸ்டீ.்.பனுடன் இணைந்து, அப்படி ஒரு ஆய்விலிறங்க முடிவு செய்து, இரு வரும் ஆய்வை மேற் கொண்டனர்.



**போலந்தில், வாவென்ஸா மற்றுமொரு கொடுங்கோலனாக மாறுவதற்கு போலந்து மக்கள் அனுமதிக்கவில்லை. சிவில் சமூகம் முழுமையாக விழித்துக் கொண்டதே இதற்குக் காரணம். ஒருவேளை, வாவென்ஸா வன்முறை வழி முறைகளைப் பின்பற்றி ஆட்சியைப் பிடித்திருந்தால், அவருக்கு எதிரான கிளர்ச்சி களை அடக்குமுறை மூலமே அணுகியிருப்பார். போராட்டத்தின் நோக்கம் மற்றும் கொள்கை களைக் காட்டிலும் முக்கியமானது போராட்ட வழிமுறைதான்.**

இந்த ஆய்வின் முடிவுகள் உலக அளவில், குறிப் பாக இராணுவ நடவடிக்கைகள் மூலம் மாற்றங் களை ஏற்படுத்த முடியும் அல்லது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்று நம்பும் அத்தனை வன்முறைக் குழுக்களுக்கும் பேரிடியாகத்தான் வந் திறங்கி யிருக்கக் கூடும். அவர்களுடைய Why Civil Resistance Works? The Strategic Logic of Nonviolent Conflict எனும் நூலின் மூலம் அகிம்சை, வன்முறைப் போராட்டங்களை விட இருமடங்கு பலனளிக்கக்கூடியது எனும் முக்கியமான கண்டடைதலை முன்வைக்கின்றனர்.

அகிம்சை வழிப் போராட்டங்கள் - பொது வாக அகிம்சை உறுதியாக தோல்வியடையும் என்று நம்பப்பட்ட - வன்முறையும் அடக்கு முறையும் நிறைந்த சூழலில் கூட வெற்றி பெறுவதை எரிக்கா சுட்டிக்காட்டுகிறார். மக்கள் தாங்கள் வன்முறையைக் கையிலெடுக்கக் காரணம் அங்கு அகிம்சை செயல்பட முடியாது என்பதால்தான் என்று சொல்வதை நாம் கேட்க முடிகிறது இத்தகைய போராட்டத்திற்கு முன்பு அங்கு தேர்ந்த சிவில் சமூகம் இல்லாத சூழலில் கூட அகிம்சை பலனளித்துள்ளது என்கிறார்.




அகிம்சைப் போராட்டங்களில் பொதுவாக வன் முறைப் போராட்டங்களைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிக மக்கள் பங்கேற்கின்றனர். மேலும் வன்முறைப் போராட்டங்களை விட அகிம்சைப் போராட்டங்களில் பங்கெடுப்பவர்கள் அதிக முனைப்புடன் செயலாற்றுவதையும் ஆய்வு பதிவு செய்கிறது.

சமூகத்தின் வெவ்வேறு பிரிவுகளின் ஒத்து ழைப்பை நம்பித்தான் எந்த ஒரு அரசும் இயங்க முடியும். குறிப்பாக உயர் வர்க்கத்து மக்கள், வணிகர்கள் மற்றும் இராணுவத்தின் துணையின்றி அரசு இயங்க முடியாது. கொடுங் கோல் அரசுகள் மக்களை அச்சுறுத்திஅனைத்து எதிர்ப்புகளையும் அடியோடு அழிக்க வேண் டும் என்று எண்ணினாலும் அதை நிறைவேற்று வது அத்தனை சுலபமல்ல. நீண்ட காலமாக, தொடர்ந்து அகிம்சை வழியிலான போராட் டம் நடைபெறும் பட்சத்தில் மேற்கண்ட சமூகக் குழுவினர்களின் ஆதரவை அரசு இழக்கும் அபாயம் உள்ளது. அதுவும் குறிப்பாக இராணுவம் மற்றும் இதர பாதுகாப்பு பிரிவுகளின் ஆதரவை இழக்கும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

மற்றுமொரு முக்கியமான விஷயம், அகிம்சைப் போராட்டத்தின் வழியே அடையப்படும் அரசாங் கங் கள் பெரும்பாலும் ஜனநாயகத் தன்மை கொண்டதாகவே இருக்கின்றன. மேலும், அங்கு மீண்டும் ஓர் உள்நாட்டுப் போர் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவே. மக்களின் அகிம்சைவழிப் போராட்டங்களின் மிகமுக்கியமான இயங்குமுறை ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் பரவலான மக்கள் சம்மதத்தை பெறுவதுதான். ஆகவே அத்தகைய வழிமுறைகளில் அடையப்படும் அரசும் அதே வழிமுறைகளையே, மக்களின் சம்மதத்தை நாடிப் பெறுவதையே ஆட்சி முறையாகக் கையாளும்.

ஆனால் ஒரு வன்முறைப் போராட்டத்தின் போது விதிமுறைகள் கத்தி முனையிலேயே உரு வாக்கப்படுகின்றன. ஆகவே ஆயுதப் போராட்டத் தின் விளைவாக அமையப்பெறும் அரசாங்கம் ஆயுதங்களைக் கைவிடுவதற்கு எந்த முகாந்திர மும் இல்லை. இதற்கு உதாரணமாக போலந்தில் லெஹ் வாவென்ஸா அரசில் ஏற்பட்ட மாற்றத்தை சுட்டுகிறார் எரிக்கா. கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை எதிர்த்து அகிம்சை முறையில் போராடி ஆட்சியை அடைந்தார் லெஹ் வாவென்ஸா. ஆனால் அவ ரது அரசால் வாக்குறுதிகளை நிறைவேற்றவோ, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கவோ முடியாமல் போன நேரம், கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகத் திரண்ட மக்களை காட்டிலும் அதிகமாக வாவென்ஸாவை எதிர்த்துத் திரண்டனர். இங்கு மக்கள் அரசாங்கத்தைத் தங்கள் கட்டுப்பாட்டிற் குள் வைத்திருப்பது புலப்படுகிறது. வாவென்ஸா மற்றுமொரு கொடுங்கோலனாக மாறுவதற்கு அவர்கள் அனுமதிக்கவில்லை. சிவில் சமூகம் முழுமையாக விழித்துக் கொண்டதே இதற்குக் காரணம். ஒருவேளை வாவென்ஸா வன்முறை வழிமுறைகளைப் பின்பற்றி ஆட்சியைப் பிடித் திருந்தால், அவருக்கு எதிரான கிளர்ச்சி களை அடக்குமுறை மூலமே அணுகியிருப்பார். போராட் டத்தின் நோக்கம் மற்றும் கொள்கை களைக் காட்டிலும் முக்கியமானது போராட்ட வழிமுறை தான். அதுவே வெற்றிக்குப் பின்னர் அரசு எப்படி அமையவிருக்கிறது என்பதைச் சுட்டுவ தாகும் என்கிறார் எரிக்கா. (தொடரும்)

# நாட்டில் மிருகபலி என்ற பெயரில் மீண்டும் இரத்தம் சிந்த விடமாட்டேன்



கடந்த 30 வருடங்களாக இரத்தத்தால் நனைந்த இந்தப் புனித பூமியை மீண்டும் மிருகபலி என்ற பெயரில் இரத்தத்தால் நனையவைக்க எவருக்கும் இடமளிக்க மாட்டேன் என்று பொதுமக்கள் தொடர்புகள் மற்றும் பொதுமக்கள் விவகார அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 30 வருடங்களாக இந்த நாடு அடிக்கடி இரத்தத்தால் நனைந்துகொண்டிருந்தது. அந்த நிலைமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் உரிய முறையில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நாட்டில் சமாதானம் நிலை பெறச் செய்யப்பட்டது.


உலகின் எந்தவொரு தலைவராலும் முடியாத வகையில் சமாதானத்தை ஏற்படுத்திய ஜனாதிபதி, நாட்டில் ஓடிக்கொணடிருந்த இரத்த ஆற்றினையும் தடுத்து நிறுத்தினார். சமாதானமாகவும் சுதந்திரமாகவும் தமது மத அனுஷ்டானங்களை மேற்கொள்ளும் இந்தத் தருணத்தில் மிருகபலி என்ற பெயரில் மீண்டும் நாட்டை இரத்தத்தால் நனையவிடப்போவதில்லை.

சிலாபம் முன்னேஸ்வரம் காளி கோயிலில் இடம்பெறும் மிருகபலி பூஜையை தடுத்து நிறுத்துமாறு பொதுமக்கள் தொடர்புகள் அமைச்சர் என்றவகையில் மதத் தலைவர்கள் பலரும் என்னிடம் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

இந்த நாட்டில் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் பலரும் இந்த மிருகபலி பூஜையை எதிர்க்கின்றனர். மிருகவதை மற்றும் மிருகங்கள் சுதந்திரமாக வாழ்வதற்கான சட்டதிட்டங்கள் நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தே நாட்டில் அமுலில் உள்ளன.

இந்நிலையில், இந்தப் புனித பூமியை மீண்டும் அசுத்தப்படுத்த நான் ஒருபோதும் இடமளிக்க மாட்டேன். அதனால், மிருகவதை தொடர்பில் உள்ள சட்டங்களில் திருத்தங்களை மேற்கொண்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# அறையில் நாகபாம்பு



கொள்ளுபிட்டியிலுள்ள இரவு விடுதியொன்றின் அறையில் நாகபாம்பொன்றை வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள பெண்ணொருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்

இந்த இரவு விடுதியில் பணியாற்றும் இப்பெண், இரு நாட்களாக இப்பாம்பை தன்னுடன் வைத்திருந்ததாக கொள்ளுபிட்டி பொலிஸாரிடம் இரவு விடுதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் முறைப்பாடு செய்திருந்தார். மேற்படி அறையில் இருந்த ஏனைய பெண்கள் பாம்பைக் கண்டு அச்சமடைந்ததால் தான் முறைப்பாடு செய்வதாக மேற்படி பாதுகாப்பு உத்தியோகஸ்தர் தெரிவித்திருந்தார். இதையடுத்து சோதனை நடத்திய பொலிஸார், பாம்பைக் கைப்பற்றி தெகிவளை மிருகக் காட்சிசாலையில் ஒப்படைத்தனர்.

இப்பெண் மனநிலை பாதிக்கப்பட்டவராகத் தென்படுவதால் அவரை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பரீட்சைக்கு சந்தர்ப்பம் மறுக்கப்பட்ட பட்டதாரியல்லாத ஆசிரியர்கள் கவனத்திற்கு

பட்டதாரியல்லாத ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்தபின் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்க சந்தர்ப்பம் மறுக்கப்பட்டவர்கள் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி நிர்வாகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பட்டதாரியல்லாத ஆசிரியர்களின் இருவருட வாரயிறுதி மற்றும் நிறுவனசார் ஆசிரிய பயிற்சி நெறிகள் கடந்த ஏப்ரல் மாதம் பூர்த்தியடைந்த நிலையில் இறுதிப் பரீட்சைகள் பல்வேறு காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டன.

இறுதியாக செப்டெம்பர் மாதம் முதல் வாரத்தில் பரீட்சைகள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும் எதிர்வரும் மாகாண சபை தேர்தல்கள் காரணமாக செப்டெம்பர் 20ஆம் திகதி பரீட்சைகளை நடத்த பரீட்சை திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக அறிய கிடைத்துள்ளது.

இறுதிப் பரீட்சைக்குப் தோற்றுவதற்கு பயிற்சி வகுப்புகளுக்கு குறைந்தது 67 சதவீத பங்குபற்றுகை கொண்டவர்களே அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். என்றாலும் தற்போது அதற்கு குறைந்த பங்குபற்றுகை உள்ளோரும் பரீட்சைக்கு தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படுவது குறித்து பரிசீலனை செய்யப்படுகின்றது.

இதன்போது வாய்ப்பு பெறுவோர் கல்வி அமைச்சும் தேசிய கல்வி நிறுவகமும் ஜீஜீசெட் சமூக இணைவுக்கான கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் உதவியோடு ஒழுங்கமைக்கும் ஐந்து நாள் வதிவிட செயலமர்வில் நூறு சதவீதம் பங்குபற்றி பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பைப் பெறமுடியும்.

மேலும், 67 சதவீதத்திற்கு குறைந்த வரவு காரணமாக பரீட்சைக்கு விண்ணப்பிக்க மறுக்கப்பட்டோர் 28-09-2012ஆம் திகதிக்கு முன்பதாக பணிப்பாளர், ஆசிரிய கல்வி நிர்வாகம், கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தர முல்ல எனும் முகவரிக்கு தமது தொலைபேசி இலக்கத்தை குறிப்பிட்டு முறையீடு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.


அவ்வாறு விண்ணப்பிப்பவர்கள் இயலுமாயின் சுய தகவல்களை 1988 உடன் அழைப்பு எனும் இலக்கத்தோடு தொடர்பு கொண்டு தெரிவிக்கவோ அல்லது s.muralitharan@moe.gov.lk எனும் முகவரிக்கு மின்னஞ்சலில் அனுப்பும்படியோ கேட்டுக் கொள்ளப்படுவதாக கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "ஜன செவன"வாக மாறிய "கம் உதாவ" வீட்டுத்திட்டம்



தனது தந்தையான முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் கம் உதாவ வீடமைப்புத் திட்டங்களுக்கு அமைச்சர் விமல் வீரவன்ச ஜன செவன என்ற முத்திரை ஒட்டியிருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். எப்பாவல பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். 2000 ஆம் ஆண்டு அனைவருக்கும் வீடுகளை வழங்க வேண்டும் என்பதே எனது தந்தையின் நோக்கம். தற்போது 11 இலட்சம் பேர் வீடுகள் இன்றி இருக்கின்றனர். மாகாண சபைகளின் ஆட்சி அதிகாரத்தை ஐக்கிய தேசியக்கட்சி கைப்பற்றிய பின்னர், எமது கட்சியின் கீழ் கிராமங்களில் வீடுகளை நிர்மாணிப்பதை ஆரம்பிப்போம் என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

# பெயர் மாற்றம்




இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம், இலங்கை ஊடகவியலாளர்கள் சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கொழும்பு பொது நூலகத்தில் நேற்று நடைபெற்ற சங்கத்தின் உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் வருடாந்தக கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது சங்கத்தின் அதிகாரிகள் உட்பட 24 நிறைவேற்று உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். சங்கத்தின் தலைவராக லசந்த ருகுணுகேவும் செயலாளராக ரங்க ஜயசூரியவும் தெரிவு செய்யப்பட்டதுடன, பொருளாளராக துமிந்த சம்பத் தெரிவு செய்யப்பட்டார். தேசிய அமைப்பாளராக உபாலி டிசேரம். உப தலைவர்களாக காஞ்சன மார சிங்க, ஞானசிறி கொத்திகொட, டிட்டோ குகன், பிக்குன் மேனக ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டதுடன் உப பொருளாளராக தாஹா முஸ்ஸாம்மில் தெரிவு செய்யப்பட்டார்.

# எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படாது

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் போதியளவு பெற்றோல் கையிருப்பு உள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அத்துடன், 35 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிபொருளைத் தாங்கிய கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கையிருப்பில் உள்ள பெற்றோலின் அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதென பெற்றோலிய சேவைகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. எவ்வாறாயினும், அதற்கான சாத்தியக்கூறுகள் குறைவு எனவும் கூட்டுத்தாபனத்தில் 70 மெட்ரிக் தொன் பெற்றோலை களஞ்சியப்படுத்த முடியும் எனவும் சங்கத்தின் பிரதான செயலாளர் ஆனந்த பாலித்த தெரிவித்துள்ளார்.



கடந்த காலங்களில் எரிபொருள் தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டதாகவும் பெற்றோலிய தேசிய சேவைகள் சங்கத்தின் பிரதான செயலாளர் தெரிவித்தார்.

கொலன்னாவையில் 40 மெட்ரிக் தொன் பெற்றோலும் முத்துராஜவெலவில் 30 மெட்ரிக் தொன் பெற்றோலும் வழமையாக களஞ்சியப்படுத் தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# இலங்கையர்களை ஏமாற்றிய நைஜீரிய பிரஜைக்குச் சிறை

லொத்தர் பரிசு கிடைத்திருப்பதாகக் கூறி, இலங்கையர்களை ஏமாற்றிய நைஜீரிய பிரஜை யொருவருக்கு கொழும்பு கோட்டை நீதவான் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

கிளின்ச் கிறிஸ்டியன் எனும் மேற்படி நபர், இலங்கை இளைஞர் ஒருவரிடமிருந்து 720,400 ரூபாவை மோசடி செய்ததாகவும் மற்றொரு வர்த்தகர் ஒருவரிடமிருந்து 1000 அமெரிக்க டொலர்களை மோடி செய்ய முயன்றதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தார். இக்குற்றச்சாட்டை ஒப்புக் கொள்வதாக அவரின் சார்பில் ஆஜரான வழக்குரைஞ ஷிராஸ் நூர்தீன் கூறினார்.

அதன்பின் மேற்படி நைஜீரிய பிரஜைக்கு 5 வருடகாலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத்தண்டனை விதித்து நீதவான் கனிஷ்க விஜேரட்ன தீர்ப்பளித்ததுடன் இரு குற்றங்களுக்கும் தலா 1500 ரூபா அபராதமும் விதித்தார்.

ஈ.எஸ்.பி.என். கிரிக்கெட் சபை நடத்திய லொத்தரில் 750,000 ஸ்ரேலிங் பவுண் பரிசு கிடைத்திருப்பதாக மேற்படி இலங்கையர்களுக்கு தொலைபேசியூடாக குறுந்தகவல் அனுப்பி மேற்படி நைஜீரிய பிரஜை மோசடி செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தார்.




இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 99 ஆவது பிறந்த தினத்தையொட்டி நேற்று காலை பழைய நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள அன்னாரது உருவச்சிலைக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான், இ.தொ.காவின் தலைவரும் பொருளாதார பிரதி அமைச்சருமான முத்துசிவலிங்கம் ஆகியோர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதுடன் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் புதல்வியர்களான நாச்சியார் தொண்டமான், விஜயலக்ஷ்மி தொண்டமான் அகியோர் அமரருக்கு மலர் கொத்து வைத்து அஞ்சலி செலுத்தினர்.



# அவன் தாள் பணிவோம்

ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள நெல்வளமும் நீர்வளமும் நிறைந்த கிளிநொச்சி மாவட்டத்தில் ஏ-9 வீதியில் மேற்கு நோக்கியவாறு வீற்றிருந்து அடியார்களுக்கெல்லாம் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இவ்வாலய மகோற்சவமானது கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சப்பரம், தேர், தீர்த்தத் திருவிழா என நடைபெறுகின்றது.

இவ்வாலயத்திற்கோர் இராஜகோபுரம் அமைப்பதற்கான திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வருகின்ற ஆண்டில் நடைபெறவிருக்கும் மகோற்சவத்திற்கு முன்னர் இந்த இராஜகோபுரம் அமைக்கும் பணிகள் சிறப்பான முறையில் நிறைவேற்றுவதற்குக் கந்தப் பெருமான் திருவருள் பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திப்பதோடு, சகல மக்களுக்கும் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கவும் இன்னருள் பாலிக்க வேண்டுமெனவும் அவர் நல்லாசி வேண்டி மகோற்சவம் சிறப்பாக நிறைவுபெற என் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தன் தேர்வடம் பிடிப்பவர்களின் இகபர துன்பங்களை முருகப்பெருமான் நீக்கி அருள்வான் என்பதோடு, புனித தீர்த்தமாடுபவர்களுக்குச் சகல சௌபாக்கியங்களையும் வழங்கியருள்வான் என்பதையும் முழு மனதுடன் நம்பி அவன் தாள் பணி வோமாக என இறையடியார்களைப் பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

"எங்கெங்கும் திருமுகம்
எங்கெங்கும் திருவிழி
எங்கெங்கும் திருச்செவி
எங்கெங்கும் திருக்கரம்
எங்கெங்கும் திருவடி
எங்கே நீ அங்கே நான்
ஈசனே முருகேசனே
கதிர்காம வாசனே"

செ.ஸ்ரீநிவாஸன்
மேலதிக அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி.

## கிளிநொச்சிக் கந்தனின் கீர்த்தி

நீரும் நெல்லும் எனப் பொலியும் கிளிநொச்சி நகரில் அருள் பொழியும் அழகுக் கந்தனின் திருவடியைப் போற்றிப் புலரும் நாட்கள் மீண்டும் எமக்கு வாய்த்துள்ளது. இன்னல்கள் ஒழிந்து, எழில் பூத்து, அமைதியும் சாந்தியும் மகிழ்ச்சியும் மலரும் நாட்கள் மீண்டும் எழுந்துள்ளன. வசந்தம் வைகறையாகத் துளிர்கின்றது.

இந்த நாட்களில் வளச் சிறப்பும் கீர்த்தியும் நிறைந்த எங்கள் அருள்மிகு கிளிநொச்சி கந்தசாமி கோயில் தீர்த்தத் திருவிழா புதுப்பொலிவோடு நடைபெறுவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகினறேன்.

இந்த நன்னாளில் கிளிநொச்சி நகரமும் கிளிநொச்சி மாவட்டமும் பெருஞ்சிறப்படைகின்றன. முருகனின் அருளும் ஆசியும் மேலும் பெற்றோங்கி இந்த மண்ணும் மக்களும் வளச் சிறப்போடு வாழ்வு சிறக்க முருகப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

"நன்றி"

மு.சந்திரகுமார்
நாடாளுமன்ற உறுப்பினர்,
நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர்.

## கிளிநொச்சி கந்தசாமி தேவஸ்தானம் தீர்த்த உற்சவ ஆசிச் செய்தி

மகோற்சவம் என்பது மானிட வாழ்வியலுடன் தொடர்புடைய இன்ப, துன்ப, விநோதங்கள் என்பவற்றைச் சார்ந்தனவாக அமைகின்றது.

இவ்வகையில் கிளிநொச்சி கந்தன் ஆலயத்தில் மகோற்சவம் ஆரம்பமாகி இன்று தீர்த்த உற்சவம் எம்பெருமான் ஆசியில் நடைபெறுகின்றது.

கிளிநொச்சி வாழ் மக்கள் தம் வாழ்வில் ஏற்பட்ட இன்னல் கள் நீங்கி நிம்மதியான வாழ்வில் சிறப்புடன் வாழ இவ்வருடம் கிளிநொச்சி கந்தன் ஆலயத்தில் முதன்முறையாக மூன்று இரதத்தில் எழுந்தருளி அடியவர்க்கு அருளாட்சி வழங்குகின்றார். அடியார்கள் யாவரும் வருகை தந்து எம்பெருமானின் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

அத்துடன் "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற வாக்கிற்கு இணங்க இவ்வருடம் எம்பெருமான் ஆலயத்தில் இராஜகோபுர அங்குரார்ப்பணம் நடைபெற்றுள்ளது. திருப்பணி வேலைகள் ஆரம்பமாக இருப்பதால் எம்பெருமானின் ஆலய வளர்ச்சியில் அடியவர்கள் பங்குகொண்டு கந்தவேள் பெருமானின் கிருபாகடாட்சம் பெற்று சுபீட்சமான வாழ்வு பெற இறைவனைப் பிரார்த்தித்து எனது நல் ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவஸ்ரீ ஜெக.ஜெகதீஸ்வரக் குருக்கள்
ஆதீன பரம்பரை குருவழியில், மஹோற்சவகுரு
முருகன் தேவஸ்தானம், குமரபுரம், பரந்தன்.


## விளம்பர அனுசரணையாளர்கள்

உங்கள் இல்லங்கள், வாணிபங்களுக்கான பொருட்களை சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற நாடவேண்டிய ஒரே இடம்
ஸ்ரீகணேசா ப.பொ. வாணிபம்
(C/1901) ஏ-9 வீதி, கிளிநொச்சி.

போட்டோ கொப்பி, ஸ்கேனிங், E.mail, Net call இணைய சேவைகளுக்கு
SKY net.Com
ஏ-9 வீதி, கிளிநொச்சி. (C/1905)

நியூ புவனேஸ்வரி புடவையகம்
தரமான உடுபுடவை வகைகளினை மலிவாகப் பெற்றிட நாடுங்கள்
இல.5, கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 077 243 1795 021 320 8295
(C/1925)

நாவிற்கு சுவையான உணவிற்கு
செல்லா ஹோட்டல்
ஏ -9 வீதி, கிளிநொச்சி.
(C/1902)

பாடசாலைக்குத் தேவைக்கான அனைத்து விதமான காகிதாதி பொருட்களுக்கும்
A9 a சப்ளையர்ஸ்
ஏ -9 வீதி, கிளிநொச்சி. (C/1907)

MOBiPC
A,-9 Road, Kilinochchi (C/1914) 077 651 1040

திருமண பட்டுப் புடவைகள் மற்றும் அனைத்து வகையான உடுபுடவைகளின் சாம்ராஜ்ஜியம்
நிஷா ட்ரெஸ் பொயின்ட்
கிளை: மன்னார் வீதி, நேரியகுளம்.
ஏ-9 வீதி, கிளிநொச்சி
(C/1903)

அழகிற்கு அழகு சேர்க்கும் தங்க நகைகளுக்கும், சிங்கப்பூர் நகைகளுக்கும்
யதுசன் நகை மாடம்
ஏ-9 வீதி, கிளிநொச்சி
(C/1908)

EBN மல்ரி சொப்
போன் வகைகள், சிம்காட், இலத்திரனியல் பொருட்கள் அனைத்தையும் பெற்றிட
கந்தசாமி கோவில் முன், ஏ-9 வீதி, கிளிநொச்சி (C/1912) 021 228 5314 077 454 7728

பாரதி உணவகம்
சுவைமிக்க இலங்கை, இந்திய, சீன உணவுகளுக்கு நாடவேண்டிய ஒரே இடம்
AC/ non A/C
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
T.P : 021 228 5370
077 551 0707
(C/1904)

தரமான தங்க நகைகளின் சாம்ராஜ்யம்
சுவர்ண ஜுவலர்ஸ்
கனகபுரம் வீதி, கிளிநொச்சி. (C/1927) 021 492 5687 077 326 8381

தரமான பொருட்கள் நியாயமான விலையில் தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
இராசையா மருந்துக்கடை
மடுமாதா கோயிலடி, ஏ-9 வீதி, கிளிநொச்சி.
(C/1910)

குறைந்த செலவில் தரமான பிறின்டிங் வேலைகளுக்கும்
பார்த்தீபன் ஆட்ஸ்
ஏ- 9 வீதி, கிளிநொச்சி
(C/1906)

ரவி லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
குறிப்பிட்ட காலப்பகுதியில் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிட நாடுங்கள்
021 791 5738 077 899 9862 (C/1924) ஏ-9 வீதி, கிளிநொச்சி.

கிளிநொச்சிக்கான டொமோகாக் சைக்கிள் ஏக விநியோகஸ்தர்
மல்ரி சொய்ஸ்
பரவிப்பாஞ்சான்
பழைய வைத்தியசாலை முன்பாக, ஏ-9 வீதி, கிளிநொச்சி.
(C/1920)

# தென்னாபிரிக்க அணி சரித்திர சாதனை

டெஸ்ட், ருவென்ரி-20, ஒருநாள் போட்டி என அனைத்து விதமான கிரிக்கெட்டிலும் முதல் இடத்தை பெற்ற முதல் அணி என்ற சரித்திர சாதனை தென்னாபிரிக்க அணி படைத்ததுள்ளது.

இங்கிலாந்து சென்றுள்ள தென்னாபிரிக்க அணி முதலில் டெஸ்ட் தொடரை வென்றது. இதையடுத்து சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தை பிடித்தது. அடுத்து, ஐந்து ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. முதல் போட்டி மழையால் கைவிடப்பட்டது. இரண்டாவது போட்டி சவுத்தாம்டனில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்பம் முதலே ஸ்மித், அம்லா ஜோடி அசத்தியது. ஸ்மித்(52) அரைசதம் கடந்தார். அடுத்த வந்த டுமினி(14) விரைவில் வெளியேறினார். டிவிலியர்ஸ் (28) ஓரளவுக்கு ஓட்டங்கள் சேர்த்தார். அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அம்லா சதம் அடித்தார். இவர், 124 பந்தில் 150 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் தென்னாபிரிக்க அணி 50 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 287 ஓட்டங்கள் எடுத்தது. கடின இலக்கை துரத்திய இங்கிலாந்து அணிக்கு கப்டன் அலெஸ்ட் குக் (0) ஏமாற்றம் அளித்தார். இயன் பெல் (45), ட்ரொட்(23), போபரா(16), சமித் படேல் (45) போராடினர். இங்கிலாந்து அணி 40.4 ஓவரில் 207 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து தோல்வியடைந்தது. 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி, ஒருநாள் போட்டிக்கான ஐ.சி.சி. தரப்படுத்தலில் பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியது.

# ஸ்ரோஸ் ஓய்வு

(லண்டன்)

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் கப்டன் ஸ்ரோஸ் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து உடனடியாக ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

தென்னாபிரிக்க அணியுடன் சமீபத்தில் நடந்த டெஸ்ட் தொடரில் தோற்ற இங்கிலாந்து அணி முதல் இடத்தை பறிகொடுத்தது. கப்டன் ஸ்ரோஸ் கணிசமாக ஓட்டங்கள் குவிக்கத் தவறியதுடன், அதிரடி சகலதுறை வீரர் கெவின் பீற்றர்சன் அணியில் இருந்து நீக்கப்படவும் காரணமாக இருந்ததாக சர்ச்சை எழுந்தது.

இந்த நிலையில், இங்கிலாந்து கிரிக்கெட் சபை நிர்வாகிகளை சந்தித்துப் பேசிய ஸ்ரோஸ், டெஸ்ட் கப்டன் பதவியில் இருந்து விலகுவதுடன் எல்லா வகை கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் உடனடியாக ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இது குறித்து அவர் கூறுகையில், 'கடந்த சில வாரங்களாகவே ஓய்வு பெறுவது பற்றி தீவிரமாக ஆலோசித்து வந்தேன். இது கடினமான முடிவுதான். எனினும், அணியின் நலன் மற்றும் எனது சொந்த நலனைக் கருத்தில் கொண்டு இந்த முடிவை எடுத்துள்ளேன். பீற்றர்சன் நீக்கப்பட்டதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை' என்றார்.

2003இல் இங்கிலாந்து அணியில் அறிமுகமான ஸ்ரோஸ் 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 7037 ஓட்டங்கள். (அதிகம் 177, சராசரி 40.91, சதம் 21, அரை சதம் 27), 127 ஒருநாள் போட்டியில் 4205 ஓட்டங்கள். (அதிகம் 158, சராசரி 35.63, சதம் 6, அரை சதம் 27), 4 ருவென்ரி-20இல் 73 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதேவேளை, டெஸ்ட் அணித் தலைவராக குக் நியமிக்கப்பட்டுள்ளார்.



# வயிற்றுவலியா? கர்ப்பமா?

திடீரென வயிற்றுவலி ஏற்பட்டதால் கர்ப்பமடைந்து விட்டேனோ என்ற பயம் எனக்கு ஏற்பட்டது என ரென்னிஸ் வீராங்கனை மரிய ஷரபோவா தெரிவித்தார்.

ரஷ்ய ரென்னிஸ் புயல் மரிய ஷரபோவாவும், கூடைப் பந்து வீரர் சுலோவேனியாவின் சஷா வுஜாசிச்சும் காதலித்து வருகிறார்கள். நிச்சயதார்த்தம் செய்து கொண்ட அவர்கள் திருமண திகதியை இன்னும் முடிவு செய்யவில்லை. இந்த நிலையில் இந்த மாத தொடக்கத்தில் திடீரென வயிற்றுவலி ஏற்பட்டதால் கர்ப்பமடைந்து விட்டதாக ஷரபோவா பயந்து விட்டாராம். இது பற்றி அவரே கூறுகிறார். வயிற்று வலி ஏற்பட்டதால் உடனடியாக வைத்தியரிடம் காண்பித்து ஸ்கேன் பரிசோதனை மற்றும் இரத்த பரிசோதனை மேற்கொண்டேன். அப்போது நான் கர்ப்பம் தரித்து விட்டேனோ என்ற குழப்பமான மனநிலையில் இருந்தேன். வைத்தியர்கள் என்னிடம்,நீ நன்றாக இருக்கிறாய், கர்ப்பமடையவில்லை. ஓய்வு எடுத்தால் சரியாகி விடும் என்று கூறிய பின்னரே நிம்மதியடைந்தேன் என்றார்.



# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர்
## கரோலின், கிளிஸ்டர்ஸ் அதிர்ச்சித் தோல்வி

(நியூயோர்க்)

அமெரிக்க ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் முன்னாள் முதல் நிலை வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி மற்றும் கிம் கிளிஸ்டர்ஸ் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினர்.

முதல் சுற்றில் ரோமானியாவின் இரினா பெகுவுடன் மோதிய வோஸ்னியாக்கி 2,6, 2,6 என்ற நேர் செட்களில் சரணடைந்தார்.

இதேவேளை, முன்னணி வீரர்கள் பலர் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர். மரியா ஷரபோவா 2ஆவது சுற்றில் ஸ்பெயினை சேர்ந்த டொமிக்ஸ் லினோவை எதிர்கொண்டார். இதில் ஷரபோவா 6-0, 6-1 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார். உலகின் முதல் நிலை வீராங்கனையான விக்டோரியா அசரென்கா இரண்டாவது சுற்றில் (பெலாரஸ்) 6-2, 6-2 என்ற நேர்செட் கணக்கில் பெல்ஜியத்தை சேர்ந்த பிப்கென்சை தோற்கடித்தார்.

முன்னாள் முதல்நிலை வீராங்கனையான கிம் கிலிஸ்டர்ஸ் (பெல்ஜியம்) 2ஆவது சுற்றிலேயே வெளியேற்றப்பட்டார். இங்கிலாந்து வீராங்கனை லவரா ராப்சன் 7-6 (7-4), 7-6 (7-5) என்ற நேர் செட் கணக்கில் கிலிஸ்டரை தோற்கடித்தார். இதேவேளை, ஆண்கள் பிரிவின் மூன்றாவது சுற்று பிரித்தானியாவின் அன்டி முர்ரே தகுதிபெற்றுள்ளார்.

# வந்தது உலகக் கிண்ணம்



(கொழும்பு)

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள ஆண்கள் மற்றும் மகளிருக்கான ஐ.சி.சி. ருவென்ரி - 20 உலகக்கிண்ண சுற்றுப்போட்டிகளுக்கான சம்பியன் கிண்ணங்கள் டுபாயிலிருந்து கடந்த புதன்கிழமை இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு, விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உபாலி தர்மதாச ஆகியோரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

## மே.தீவுக்கு அதிக வாய்ப்பு

(கொல்கத்தா)

உலகக் கிண்ண ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் சம்பியன் பட்டத்தை மேற்கிந்திய தீவுகள் அணி வெல்லக்கூடிய சாத்தியம் உள்ளதாக இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

கிறிஸ் கெய்ல், கெய்ரன் பொலாட், டுவைன் ஸ்மித், அன்று ரசெல் மற்றும் சுனில் நரேன் போன்ற சிறந்த வீரர்கள் அந்த அணியில் உள்ளனர்.


பிடெல் எட்வேட்ஸ் மற்றும்கமரூச் போன்ற வேகப் பந்து வீச்சாளர்களும் அணிக்குப் பெரும் பலமாக இருப்பர்.

அத்துடன் உலகக் கிண்ண ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரை இரண்டாவது முறையாக பாகிஸ்தான் அணி கைப்பற்றக் கூடும்.

இலங்கையில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் இந்த இரு அணிகளும் இந்திய அணிக்குச் சவாலாக இருக்கும்.

ஒட்டுமொத்தத்தில் பரபரப்பு நிறைந்த ஒரு தொடராக ருவென்ரி-20 உலகக் கிண்ண தொடர் அமையும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# விருதை வென்றது மகிழ்ச்சி



(புதுடில்லி)

அர்ஜூனா விருதுக்கு இதற்கு முன்பு சில முறை எனது பெயர் பரிந்துரைக்கப்பட்டாலும், இந்த முறை அதனை பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. எனக்கும், எனது குடும்பத்தாருக்கும் இது பெருமைமிக்க தருணம். இந்த விருது மீண்டும் சாதிக்க நிறைய நம்பிக்கையை அளிக்கும் என அர்ஜூனா விருது வென்ற யுவராஜ்சிங் தெரிவித்தார்.

என்னை விமர்சிப்பவர்கள், நான் உடல்தகுதியை எட்டுவதற்கு எப்படி உழைக்கிறேன் என்பதை நேரில் பார்க்கவில்லை. எனது உடல்தகுதி பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது. நான் நல்லநிலையில் இருப்பதாக உணர்கிறேன். ருவென்ரி - 20 உலக கோப்பை போட்டியில் சிறப்பாக செயற்பட முடியும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறேன். பெங்களூர் கிரிக்கெட் அக்கடமியில் நான் கடினமாகப் பயிற்சி மேற்கொண்டு வருகிறேன். அங்குள்ள நிபுணர்கள் என்னுடைய உடல்தகுதி நிலையைக் கண்காணித்து கொண்டிருக்கிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

# 4 விக்கெட்டுக்களால் வெற்றி

பாகிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 4 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது. போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 45.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பாகிஸ்தான் அணி சார்பாக அதிகபட்சமாக அஷாட் ஷபீக் 56 ஓட்டங்களைப் பெற்றதுடன் உமர் அக்மல் 52 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மிச்சேல் ஸ்டாக் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதுடன் ஜேம்ஸ் பட்ரின்சன் இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

199 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 48.2 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு வெற்றியிலக்கை எட்டியது. இதில் மைக்கல் கிளார்க் 66 ஓட்டங்களைப் பெற்றதுடன், ஜோர்ஜ் பெய்லி ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களைக் குவித்தார். பந்து வீச்சில் சயிட் அஜ்மால் மூன்று விக்கெட்டுகளையும், மொஹமட் ஹபீஸ் இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். மூன்று போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் 1-0 என்ற ஆட்டக்கணக்கில் அவுஸ்ரேலிய அணி முன்னிலை பெற்றுள்ளது.

# தண்டனைக்கு எதிராக நடவடிக்கை தேவை

அமெரிக்க நட்சத்திர சைக்கிளோட்ட வீரர் லான்ஸ் ஆம்ஸ்ரோங்குக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக சர்வதேச சைக்கிளோட்ட சம்மேளனம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்பெயின் சைக்கிளோட்ட வீரர் அல்படோ கொன்டாடோ குறிப்பிட்டுள்ளார்.

தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தை பாவித்தமைக்காக லான்ஸ் பெற்றுக்கொண்ட அனைத்து வெற்றிகளும் இரத்து செய்யப்பட்டதுடன் போட்டிகளில் பங்கேற்பதற்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டது.

அமெரிக்க தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து கட்டுப்பாட்டு நிலையத்தின் தீர்மானத்திற்கு எதிராக சர்வதேச சைக்கிளோட்ட சம்மேளனம் நடவடிக்கை எடுப்பதற்கான காலம் வந்துள்ளதாக கொன்டாடோ கூறியுள்ளார்.

இதில் அமெரிக்க தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து கட்டுப்பாட்டு நிலையம் நிதானமாகச் செயற்படவில்லை என்றே எனக்குத் தோன்றுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டு சர்வதேச சைக்கிளோட்ட சம்மேளனம் செயற்படும் என்றார்.

ஆம்ஸ்ரோங்குக்கு விதிக்கப்பட்ட தண்டனை தொடர்பில் மீள் பரிசீலனை செய்யுமாறும் சர்வதேச சைக்கிளோட்ட சம்மேளனம் கோரியுள்ளதாகத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

# கோப்பாய் ஸ்ரார், பாரதி, கிங்ஸ், அரசடி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி

(யாழ்ப்பாணம்)

முருகமூர்த்தி வெற்றிமாதா வெற்றிக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு பாரதி, கொக்குவில் கிங்ஸ், கோப்பாய் ஸ்ரார் மற்றும் அரசடி அணிகள் தகுதிபெற்றுள்ளன.

முருகமூர்த்தி வெற்றிமாதா விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர் மென்பந்து கிரிக்கெட் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் அண்மையில் முருகமூர்த்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முதலாவது காலிறுதிப் போட்டியில் கேசாவில் அணியும் பாரதி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கேசாவில் அணி 4.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 21 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஹரிநாத் 10 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் விஜயன், நிரோஜன், நிருசன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.


பதிலுக்கு 22 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாரதி அணி 3.4 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இதில் பவிதரன் 15, விஜயன் ஒன்பது ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணைபுரிந்தனர். இவ்வெற்றியின் மூலம் பாரதி அணி அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொறு காலிறுதிப் போட்டியில் மீனாட்சி அணியும் கொக்குவில் கிங்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொக்குவில் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மீனாட்சி அணி 5.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 45 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குமார், உதயா தலா 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பவிதரன், பிரசாந் தலா இரண்டு, கண்ணா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 46 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் கிங்ஸ் அணி ஆறு ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கஜிந்தன் 15, பிரசாந்தன் 14 ஓட்டங்களைப்பெற்றனர். பந்து வீச்சில் குமார், சுதாஸ் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் கொக்குவில்கிங்ஸ் அணி அரையிறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு காலிறுதிப் போட்டியில் ஆதிகேசவன் அணியும், கோப்பாய் ஸ்ரார் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஆதிகேசவன் அணி 4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 27 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விமல், ஜனகன் தலா 9 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கோபி மூன்று, தீபன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 28 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கோப்பாய்ஸ்ரார் அணி 3.1 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இதில் தீபன் 20 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குப் பலம் சேர்ந்தார். இதன் மூலம் கோப்பாய் ஸ்ரார் அணி அரையிறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியைப் பெற்றது. இதேவேளை, அரசடிஅணி நேரடியாக அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (53)



மாலுச்சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட மாபெரும் கால்பந்துத் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட ஊரெழு றோயல் அணித் தலைவர் விருந்தினரிடமிருந்து கிண்ணத்தைப் பெறுக் கொள்வதைக் காணலாம். இப்போட்டித் தொடரில் மயிலங்காடு ஞானமுருகன் அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (12)

# விளையாட்டுத்துறைக்குள் அரசியல்வாதிகள் இல்லை



(கொழும்பு)

விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கும், வளர்ச்சியடைச் செய்வதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் இச்சந்தர்ப்பத்தில் விளையாட்டுக் கழகங்கள், அமைப்புக்கள், நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு அடுத்த வருடம் முதல் அரசியல்வாதிகள் நியமிக்கப்படமாட்டார்கள் என விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான வாக்குறுதியொன்றை அமைச்சர் இதற்கு முன்னரும் வழங்கியிருந்தார். அமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கியிருந்த நிலையிலேயே, கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் பதவி வகித்த நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவை அந்தப் பதவிக்கு மீண்டும் நியமிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதற்கு மேலதிகமாக எஸ்.பீ.திஸாநாயக்க, விமல் வீரவன்ச, டிலான் பெரேரா உள்ளிட்ட அமைச்சர்கள் சிலரும் விளையாட்டுத்துறையில் பதவிகளை வகித்து வருகின்றனர்.

கரப்பந்து சம்மேளனத்தின் தலைவர் பதவி வகித்த அமைச்சர் டிலான் பெரேரா கரப்பந்தாட்டத்திற்கு பாரிய சேவை ஆற்றியிருப்பதால் அவரை அந்தப் பதவியிலிருந்து நீக்க முடியாது என விளையாட்டுத்துறை அமைச்சர் முன்னர் தெரிவித்திருந்தார்.

கிரிக்கெட் விளையாட்டுத்துறையில் பல மாற்றங்களைச் செய்ய எதிர்பார்த்துள்ளதாகக் கூறும் அமைச்சர், சர்வதேச கிரிக்கெட் பேரவையின் நிர்வாக சபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளரான ஹரேன் லொர்காட்டை கிரிக்கெட் விளையாட்டுத்துறையின் ஆலோசகராக நியமிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்

விளையாட்டுச் செய்திகள்

# இரண்டாம் கட்டப்போட்டிகள் அடுத்த மாதம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வி அமைச்சினால் அகில இலங்கை பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படுகின்ற பெரு விளையாட்டுப் போட்டியில் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற பாடசாலை அணிகளுக்கான இரண்டாம் கட்டப் போட்டிகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளன.

இரண்டாம் கட்டப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிகள் மாத்தளை எட்வேட் பாக் விளையாட்டு மைதானத்திலும் வேனாட் அலுவிகார் விளையாட்டு மைதானத்திலும் எதிர்வரும் 15ஆம் 16ஆம் 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

வடமாகாண அணி சார்பில் ஆண்கள் பிரிவில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் கலந்துகொள்ளவுள்ளன.

பெண்கள் பிரிவில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வவனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியன கலந்து கொள்ளவுள்ளன. (93)




அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் இராணுவத்தினரால் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நடைபெற்றது. இதில் 25இக்கு மேற்பட்ட அணிகள் பங்குபற்றின. இதில் ஒலுவில் அல்கூஷ்ம்ரா மகாவித்தியாலய அணி பலபோட்டிகளில் வென்று இறுதியில் பொத்துவில் மத்திய கல்லூரியை 1-0 என்ற கணக்கில் வெற்றிபெற்று மாவட்ட சம்பியனாகியது. கிண்ணம் வென்ற அணி விருந்தினர்களுடன் நிற்பதைக் காணலாம். (93)

# சார்க் மகளிரணி கால்பந்து ஒக்டோபரில் ஆரம்பம்

(கொழும்பு)

சார்க் நாட்டு அணிகளுக்கிடையே நடைபெறும் மகளிருக்கான இரண்டாவது கால்பந்தாட்டப் போட்டித் தொடர் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை சீ. ஆர். எப். சி.விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. 'ஏ' மற்றும் 'பீ' பிரிவுகளாக நடைபெறும் இப் போட்டித் தொடரில் எட்டு மகளிர் அணிகள் பங்கு கொள்கின்றன.

'ஏ' பிரிவில் இந்தியா, பங்களாதேஷ், இலங்கை மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அணிகள் கலந்து கொள்வதுடன் 'பீ' பிரிவில் நேபாளம், மாலைதீவு, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் அணிகள் கலந்து கொள்கின்றன.

இப்போட்டி குறித்து இலங்கை அணித் தலைவி குறிப்பிடுகையில், கடந்த காலங்கள் போல் அல்லாமல் இந்த முறை நிச்சயம் குறித்த இலக்கை நோக்கிப் பயணிப்போம்.

எமது அணியில் அனுபவம் வாய்ந்த வீரர்கள் பலர் உள்ளனர். அவர்களின் ஆட்டத்திறன் எமது அணியை அரையிறுதிக்கோ அல்லது இறுதிப் போட்டிக்கோ அழைத்துச் செல்லும் என நம்புகின்றேன்.

முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை. இத்தொடரில் சாதிக்க முடிந்த வரை முயற்சிப்போம் என அவர் தெரிவித்தார்.

# இஸட் புள்ளியும் தரப்படுத்தலும் இனப்பிரச்சினையும்

- எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.

கல்விப் பொதுத் தராதர (உயர்தர)ப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களைத் தரப்படுத்தும் இஸட் புள்ளி முறை இப்போது பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கிறது. இஸட் புள்ளி முறையை எவரும் தரப்படுத்தல் முறையாக வர்ணிப்பதில்லை. ஆனால் உண்மையிலேயே இது ஒரு வகையிலான தரப்படுத்தல் முறையே. மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றும் பாடங்களுக்கு அவர்கள் பெறும் புள்ளிகளையும் அவர்கள் தோற்றிய பாடங்களுக்கு வழங்கப்படும் பெறுமதியையும் மொத்தமாகக் கவனத்தில் கொண்டுதான் இஸட் புள்ளி வழங்கப்படுகிறது. எனவே அது மாணவர்களைத் தரப்படுத்தும் முறை என்பதில் சந்தேகமே இல்லை.

இதற்கு முன்னர் தரப்படுத்தல் என்ற பெயரிலேயே நடைமுறையில் இருந்த புள்ளி முறை முப்பது ஆண்டு காலமாக நீடித்த கொடிய யுத்தத்திற்கும் முக்கிய காரணமொன்றாகியது.

கடந்த வருடம் உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான இஸட் புள்ளி கணக்கிடப்பட்ட முறை பிழையென ஒரு சிலர் குற்றஞ்சாட்டியதிலிருந்து தான் இம்முறை பிரச்சினை ஆரம்பித்தது. இஸட் புள்ளி முறையை அறிமுகப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்த பேராசிரியர் தட்டில்லும் இம்முறை இஸட் புள்ளி கணிப்பீடு பிழையானது என்றார். அமைச்சர்கள் அதனை ஏற்கவில்லை. எனவே, பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படாத சில மாணவர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். நீதிமன்றம் அவர்களின் வாதத்தை ஏற்று இஸட் புள்ளிகளை புதிதாக கணிப்பீடு செய்ய வேண்டும் என உத்தரவு பிறப்பித்தது.

அதிகாரிகள் அதற்கு இணங்க புதிதாக இஸட் புள்ளிகளைக் கணிப்பீடு செய்யவே, அதனால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக முன்னர் பாதிக்கப்படாத சில மாணவர்கள் இப்போது புதிதாக வழக்கு தொடர்ந்துள்ளனர். எனவே இப்போது இஸட் புள்ளி முறையே பெரும் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளது.

இஸட் புள்ளி முறைக்கும் 1973ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தல் முறைக்கும் அடிப்படையாக அமைந்துள்ள காரணம் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து கொள்ள தகைமை பெறும் சகல மாணவர்களையும் பல்கலைக் கழகங்களில் சேர்த்துக் கொள்ள அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்காமையே. எனவே பல்கலைக்கழகங்களில் சேர்ந்து கொள்வதற்கான உண்மையான தகைமையை விட்டு விட்டு அரசாங்கங்கள் வேறு செயற்கையான தகைமைகளை உருவாக்குகின்றன. 1973 ஆம் ஆண்டு தரப்படுத்தல் மற்றும் இஸட் புள்ளி முறை அவ்வாறான செயற்கைத் தகைமைகளாகும்.



அனேகமாக நாடுகளில் விடுதலைப் போராட்டங்கள், பிரிவினைப் போராட்டங்கள் மற்றும் புரட்சிகள் மாணவர் அல்லது இளைஞர் போராட்டங்களாகவே ஆரம்பித்துள்ளன. தென் பகுதியில் 1971ஆம் ஆண்டிலும் 1988 - 89 ஆண்டுகளிலும் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சிகளும், அதே போல் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தரப்படுத்தலினால் ஏற்பட்ட நிலைமையும் இதுவே.


எனவே தற்போதைய இஸட் புள்ளி விவகாரமும் பாரதூரமான பிரச்சினையாகும். இதனால் இனப்போர் போன்றதோர் நிலைமை ஏற்படுவதில்லைதான். ஆனால் இந்தப் பிரச்சினையினால் மாணவர் சமுதாயத்தில் எவ்வளவு பெரிய விரக்தி ஏற்படுகின்றது என்பதை பழைய வரலாறு எடுத்துக் காட்டுகிறது. பரீட்சைமுறையைப் பற்றி மாணவர்கள் நம்பிக்கையை இழப்பதானது தமக்கு எதிர்காலம் இல்லை என்ற பயங்கர உணர்வை அவர்களுக்கு வழங்குகிறது. அது அவர்களை தவறான வழிகளில் இட்டுச் செல்லலாம்.

தகுதியுள்ள சகல மாணவர்களையும் உள்ளீர்த்துக் கொள்ள பல்கலைக்கழகங்களில் போதிய வளங்களும் வசதிகளும் இல்லை என அதிகாரிகள் கூறியிருந்தனர். வளங்களும் வசதிகளும் இல்லாமை மட்டுமே பிரச்சினையல்ல. வளங்களும் வசதிகளும் இருந்தாலும் தகுதியுள்ள சகல மாணவர்களுக்கும் பல்கலைக்கழக கல்வியை வழங்கினால் அவர்களுக்கு அக் கல்விக்கேற்ற தொழில் வழங்கும் பிரச்சினையும் எழப் போகிறது. அதற்கான பொருளாதாரத் திட்டம் எதுவும் அரசாங்கங்களிடம் இல்லை.

சர்வதேச நிலைமைகளும் அவ்வாறான பொருளாதார திட்டங்களைத் தயாரிக்கக்கூடியதாக இல்லை. பலம் வாய்ந்த நாடுகளுக்கு இலங்கை, இந்தியா, வங்காள தேசம் போன்ற நாடுகளை தமது சந்தையாக பாவிக்கும் அவசியம் இருப்பதால் அப்பலம் வாய்ந்த நாடுகளும் "அபிவிருத்தி அடைந்து வரும்" நாடுகளை கைத்தொழில் நாடுகளாக மாற்றி அந்நாடுகளில் தொழில் பிரச்சினையை தீர்க்க உதவி வழங்கப் போவதில்லை.

எனவே "அபிவிருத்தி அடைந்து வரும்" நாடுகளின் ஆட்சியாளர்கள் கல்விப் பிரச்சினை என்று வரும் போது இஸட் புள்ளி அல்லது தரப்படுத்தல் போன்ற தீர்வுகளை வழங்குகிறார்கள். தொழிற் பிரச்சினை என்று வரும் போது ஒரு காலத்தில் தனிச் சிங்களச் சட்டத்தை கொண்டு வந்தார்கள். அதற்குப் பின்னர் இப்போது தாராள பொருளாதார முறையின் கீழ் பெருகிய தனியார் துறையினர் மீது தங்கியிருக்கிறார்கள்.

போருக்காக கடந்த சுமார் 30 ஆண்டுகளாக அரசாங்கங்கள் செலவிட்ட பெருந்தொகைப் பணத்தை தூர நோக்கோடு 1970 களில் இருந்து கல்விக்காகவும் கைத்தொழில்களை உருவாக்குவதற்காகவும் செலவிட்டு இருந்தால்




தரப்படுத்தல் முறையையோ இஸட் புள்ளி முறையையோ தனிச் சிங்கள சட்டத்தையோ கொண்டுவரத் தேவையில்லை.

அவ்வாறு செய்திருந்தால் பிரச்சினைகளும் ஓரளவுக்காவது தீர்ந்திருக்கும், போரும் நடந்திருக்காது. இப்போதும் தாமதம் என்றில்லை. ஊழல் மோசடிகளினால் தற்போது நாடு இழக்கும் சாதாரண மக்களால் எண்ணியும் பார்க்க முடியாத பாரிய நிதித் தொகையை கல்விக்காகவும் கைத்தொழில்களை உருவாக்குவதற்காகவும் பெற்றுக் கொள்ள முடியுமென்றால் எதிர்காலம் பாதுகாப்பாக அமையும்.

# மகாபாரதப் பாடம்!



யுத்தம் நடந்ததன் மூலம் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய போதனை இதுதான். யுத்தத்தைத் தவிர்க்க வேண்டும். இல்லையென்றால் அந்த யுத்தம் நம்மைத் தின்றுவிடும்.

முதல் இரண்டு உலக மகா யுத்தங்களையும் நடத்தியவர்கள் அதை ஆரம்பிப்பதற்கு முன் மகாபாரதத்தில் உள்ள யுத்த காண்டத்தைப் படித்திருந்தால், நிச்சயமாக அந்த இரண்டு யுத்தங்களையுமே அவர்கள் தவிர்த்திருப்பார்கள்.

பூமியின் பாரத்தைக் குறைப்பதற்காகத்தான் மகாபாரத யுத்தம் நடந்தது என்றும் மகாபாரதத்தில் ஒரு தகவல் இருக்கிறது.

பூமியின் பாரத்தைக் குறைக்க நினைத்தது சரிதான். ஆனால் அதற்காக ஒருவரை ஒருவர் வெட்டிக் கொண்டு சாகும் யுத்தத்தை ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்பதுதான் தெரியவில்லை.

கடுமையான மழை, வெள்ளம், பயங்கரமான காற்று, மோசமான பூகம்பங்கள்... இப்படி இயற்கையின் சீற்றங்கள் மூலமாகக் கூட பூமி தேவியின் பாரத்தைக் குறைத்துவிட இயற்கையால் முடியும். யுத்தம் என்பது அதற்குரிய சரியான ஒரு நடவடிக்கை அல்ல.

இன்னொன்று அஸ்திவாரமே இல்லாமல் கடைக்காலும் போடாமல் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் இந்த பூமிக்கு பாரம் எப்படி வந்தது. எங்கிருந்து வந்தது. இதுவும் சரியாகப் புரியவில்லை.

பூமிக்குள் ஏற்கெனவே இருந்ததுதான். பூமிக்கு வெளியேயும் வருகிறது. அப்படி வந்ததுதான் அழியும்போது மீண்டும் பூமிக்குள் புதைகிறது.

ஆகவே புதிதாக ஒன்று தோன்றுவதினால் பூமியின் பாரம் அதிகரிப்பதும் இல்லை. அது மறைவதினால் பூமியின் பாரம் குறைவதும் இல்லை. பாரம் அதிகமாகிப் போனால் பூமி ஆகாயத்தில் மிதக்காதே.

ஆகவே யுத்தம் பூமியின் பாரத்தைக் குறைத்துவிடும் என்பதில் இருக்கும் உண்மையைவிட, யுத்தம் பூமியின் வேதனையை அதிகரித்துவிடும் என்பதிலேயே அதிக உண்மை இருக்கிறது.

எந்த ஒரு பகையையுமே மனிதன் தொடரவிடக் கூடாது. அப்படியே தொடர்ந்தாலும் அதை ஒரு யுத்தமாக ஆக்கிவிடக் கூடாது. அது வீட்டுப் பகையாக இருந்தாலும் சரி, நாட்டுப் பகையாக இருந்தாலும் சரி. இதுவே மகாபாரதம் நமக்குக் கற்றுத் தரும் பாடமாகும்.

**('ஒரு வழக்கு.... துரியோதனனை ஆதரித்து...' என்ற நூலில் எஸ்.விஜயராஜ்)**

# அழகுக் குறிப்பு



◗ முட்டைக் கோஸ் இலைகளின் சாறை எடுத்து அத்துடன் சிறிது ஈஸ்ட், ஒரு தேக்கரண்டி தேன் சேர்த்து பசை போன்று குழைத்து அதை முகத்தில் தடவ வேண்டும். 20 நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் முகம் கழுவி, பின்னர் குளிர்ந்த நீரைக் கொண்டு கழுவினால் முகத்தில் உள்ள சுருக்கங்கள் மறைந்துவிடும்.

◗ தேன், எலுமிச்சைச்சாறு கலந்த கலவையை உதட்டின் மீது தொடர்ந்து தடவி வந்தால் லிப்ஸ்டிக் பயன்படுத்துவதால் ஏற்படும் கருமை நிறம் ம்மறையும்.

◗ முழங்கை கறுப்பாகவும், சொரசொரப்பாகவும் இருந்தால் தேங்காய் எண்ணெயுடன் எலுமிச்சம் சாறு கலந்து தடவி வர மிருதுவாக மாறும்.

◗ நன்றாகப் பழுத்த வாழைப்பழத்தை மசித்து அதில் பன்னீரைக் கலந்து முகத்தில் தடவி மசாஜ் செய்யவும். அதை அப்படியே ஒரு மணி நேரம் காயவிட்டு வெதுவெதுப்பான நீரில் முகத்தை அலம்பினால் முகத்தில் இருக்கும் பருக்களை அகற்றி சருமத்தை மென்மையாக்கும்.

◗ வெள்ளரிக்காயையும், கரட்டையும் மிக்ஸியில் போட்டு நன்றாக அரைத்து அதை முகத்தில் பூசி வந்தால் முகம் எண்ணெய் வழியாமல் இருக்கும். முகத்தில் இருக்கும் புள்ளிகள், கரும் மச்சங்களும் மறைந்துவிடும்.

◗ ஒரு தேக்கரண்டி துளசி இலையின் சாறுடன் அரைத் தேக்கரண்டி தேன் கலந்து தினமும் காலையில் சாப்பிட்டு வந்தால் தோல் பளபளப்பாக மாறிவிடும்.

◗ பப்பாசிப் பழத்தை அரைத்து முகத்தில் தொடர்ந்து தடவி வர முகப்பரு, கரும்புள்ளி ஆகியவை மறையும்.


# சினிமா சினிமா



குழந்தை நட்சத்திரமாக ஏராளமான படங்களிலும், பின்னர் சிறந்த நடிகையாகவும் முத்திரை பதித்த ஷாலினி, அஜித்தைத் திருமணம் செய்துகொண்ட பிறகு நடிப்புக்கு "குட்பை" சொல்லிவிட்டு முழு நேர குடும்பத் தலைவியாக மாறினார். ஆனால் சிறு வயதிலிருந்தே - அவரது ஆர்வமான - இறகுப் பந்து விளையாட்டை மட்டும் கைவிடவில்லை. திருச்சியில் நடைபெற்ற இறகுப் பந்து தர வரிசையை நிர்ணயிக்கும் போட்டியில் கலந்துகொண்டு, மகளிர் இரட்டையர், கலப்பு இரட்டையர் பிரிவுகளில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள மாநில அளவிலான இறகுப் பந்து போட்டியில் முதலிடத்தைப் பிடிக்க வேண்டும் என்ற வெறியோடு கடுமையான பயிற்சியில் ஈடுபட்டு வருகிறாராம்.

பவர் ஸ்டார் சீனிவாசனைத் தொடர்ந்து, மற்றுமொரு டாக்டர் சூப்பர் பவருக்காக களமிறங்குகிறார். மதுரையைச் சேர்ந்த பி.சரவணன் என்ற டாக்டர் நடிகர்-தயாரிப்பாளராக "அகிலன்" என்ற பெயரில் படம் எடுக்கிறார். சுப்பிரமணியசிவா, எஸ்.எஸ்.ஸ்டான்லி ஆகியோரிடம் உதவியாளராகப் பணியாற்றிய ஹென்றி ஜோசப் படத்தை இயக்குகிறார். இசை வெளியீட்டு நிகழ்ச்சியில் நமீதா, சோனியா அகர்வால், லிங்குசாமி போன்ற பல பிரபலங்கள் கலந்துகொண்டனர். டாக்டர் பி.சரவணன் ஏராளமான தொண்டு நிறுவனங்களுக்கு உதவி வருவதோடு மாதத்துக்கு இரண்டு ஏழைக் குடும்பத்தினருக்கு இலவசமாக இதய அறுவை சிகிச்சையும் செய்து வருகிறாராம்.

தன் முதல் படமான, "புதிய பாதை" படத்தை, "மீண்டும் புதிய பாதை" என்ற பெயரில் ரீ-மேக் செய்கிறார் பார்த்திபன். இதில், தன் கேரக்டரை முழு வில்லனாகவே மாற்றியிருக்கும் பார்த்திபன், சீதா நடித்த வேடத்துக்காக, கேரளா, பெங்களூரு சென்று, புதுமுக நடிகையை தேடி வருகிறார்.



நயன்தாராவுடனான உறவை முறித்துக்கொண்டு மீண்டும் மனைவி பக்கம் திரும்பத் தயாராகிவிட்டார் பிரபுதேவா. இதையடுத்து தனக்கு எஸ்.எம்.எஸ். மூலம் ஆறுதல் சொன்ன சிம்புவிடம் மீண்டும் நட்பு பாராட்டத் தொடங்கியுள்ளார் நயன்தாரா. அண்மையில் ஹைதராபாத்தில் நடைபெற்ற விருந்தொன்றில் சிம்பு - நயன் ஆகியோரின் செல்லச் சண்டைதான் பார்ட்டியின் ஹைலைட்டாம்.

ரஜினி நடித்த "தில்லு முல்லு" படம் ரீமேக் செய்யப்படுகிறது. பத்ரி இயக்குகிறார். சிவா கதா நாயகனாகவும் கேரளத்தில் சமீபத்திய சூப்பர் ஹிட் படமான "தட்டத்தின் மறையத்து" படத்தின் நாயகி இஷா தல்வார் கதாநாயகியாகவும் நடிக்கிறார்கள். முதல்முறையாக எம்.எஸ்.விஸ்வநாதனும் யுவன்ஷங்கர் ராஜாவும் இணைந்து இசையமைக்கிறார்கள்.



ஆண்டுதோறும் தன் பிறந்த நாளான ஆகஸ்ட் 9ஆம் திகதி, இரண்டு குழந்தைகளைத் தத்தெடுத்து அவர்களின் கல்விச் செலவு, உணவு, உடை, இருப்பிடத்துக்கான அனைத்து செலவுகளையும் ஏற்றுக்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார் ஹன்சிகா. ஹிந்தியில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானதில் இருந்து இந்தப் பழக்கம் தொடருகிறது. அதன்படி ஹன்சிகாவுக்கு இதுவரை 22 தத்துக் குழந்தைகள் இருக்கிறார்கள். ஏஞ்சலினாவாக ஆசை!

# முட்டாள் ராசாவின் முடிவு?



ஒரு ஊரில் ஒரு ராசா முட்டாள்தனமான செயற்பாடுகளை உடையவனாக இருந்தான்.

அவனுடைய நாட்டில் அனைவரும் பகலில் தூங்கி விட வேண்டும். இரவில் விழித்து வேலை பார்க்க வேண்டும் என்று அறிவுறுத்தி இருந்தான். இதை மீறுபவர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்படும் என்றும் எச்சரித்திருந்தான்.

பக்கத்து நாட்டைச் சேர்ந்த புத்திசாலித்தனமான மூன்று நண்பர்கள் தங்கள் திறமையைக் காண்பித்து மன்னரிடம் பரிசு பெற்றுச் செல்லலாம் என வந்தனர்.

அவர்களுக்கு அந்நாட்டிலிருந்த மன்னரின் விதிமுறை வித்தியாசமாக இருந்தன.

மன்னரின் மூடத்தனமான செயற்பாடு அவர்களுக்குப் புதியதாக இருந்ததால், மன்னரை அந்த மூடத்தனத்தைக் கொண்டே அழித்திடத் திட்டம் தீட்டினார்கள்.

மறுநாள், காலை விடிந்தவுடன் அவர்கள் எழுந்து சமையல் செய்யத் தொடங்கினர்.

நகர்வலம் வந்த அந்நாட்டு வீரர்கள் அவர்களிடம், "இந்த நாட்டுச் சட்டம் தெரியாமல் இப்படி சமையல் செய்ததால், தங்களை விட்டு விடுகிறோம். நீங்கள் மூவரும் இப்போது தூங்கிவிட்டு, இரவு வந்த பின்பு சமையல் செய்யலாம்" என்றனர்.

அதற்கு மூவரும், "முடியாது. நாங்கள் பகலில் சமைத்துச் சாப்பிடுவோம். இரவில்தான் தூங்குவோம்" என்றனர்.

அந்நாட்டுப் படைவீரர்கள் மூவரையும் அழைத்துக் கொண்டு, மன்னன் முன்பு நிறுத்தினர்.

மன்னர், "எதற்காக இப்படி பகலில் தூங்காமல் சமையல் செய்தீர்கள்? இந்நாட்டுச் சட்டம் தெரியாது என்று சொன்னால் உங்களை விடுவித்து விடுகிறேன். நாளை முதல் இந்நாட்டுச் சட்டப்படி நடந்து கொள்ளுங்கள்" என்றார்.

உடனே மூவரும், "இல்லை, மன்னா, தங்கள் நாட்டுச் சட்டம் தெரிந்துதான் இப்படிச் செய்தோம்" என்றனர்.

"மன்னரின் உத்தரவு தெரிந்தும் அதை மீறிச் செயற்பட்ட இவர்கள் மூவரையும் கழுவிலேற்றிக் கொன்று விடுங்கள்" என்று ஆணையிட்டான்.

அவர்கள் மூவரும் துள்ளிக் குதித்து மகிழ்ச்சியடைந்தனர்.

இதைப் பார்த்த, அரசவையிலிருந்த அனைவரும் அதிர்ச்சியடைந்தனர்.

மூன்று பேர்களும், "மன்னா! என்னை முதலில் கழுவிலேற்றிக் கொல்லுங்கள்" என்று தாங்களாகவே முன் வந்தனர்.

மன்னருக்கு மீண்டும் அதிர்ச்சி. மரணத்திற்கு முதலில் நான் என்று மூவரும் போட்டியிடுகிறார்களே என்று ஆச்சரியப்பட்டான்.

மன்னன் அவர்களிடம், "முதலில் மரணமடைய வேண்டுமென்று நீங்கள் மூவருமே விரும்புவது ஏன்?" என்று கேட்டான்.

மூவரும், "மன்னா, இன்று முதலில் இறப்பவர்கள் நேரடியாகச் சொர்க்கம் செல்வார்கள். எனவே, நான்தான் முதலில் மரணமடைவேன்" என்றனர்.

இதைக் கேட்ட மன்னன், மந்திரிகளிடம் ஆலோசித்தான்.

மந்திரிகள், "மன்னா, இவர்கள் மூவரும் மரணத்தை முதலில் ஏற்று சொர்க்கம் செல்ல வேண்டுமென்று விரும்புகிறார்கள். வேற்று நாட்டிலிருந்து நம் நாட்டிற்கு வந்து இவர்கள் சொர்க்கம் செல்வதா? நம் நாட்டிலிருப்பவர்களுக்குத்தான் அந்த வாய்ப்பு கிடைக்க வேண்டும்" என்று அறிவுரை வழங்கினர்.

மன்னன், "நாம் மரணமடைந்து சொர்க்கம் சென்று விட்டால் என்ன?" என்று யோசித்தான்.


பின்னர் அவன் மந்திரிகளிடம், "நீங்கள் சொல்வது சரிதான். இன்று மரணத்தை ஏற்று நானே சொர்க்கம் செல்கிறேன்" என்று சொல்லியபடி அவனைக் கழுவிலேற்றவும் உத்தரவிட்டான்.

அந்நாட்டு வீரர்களும் மன்னனைக் கழுவிலேற்றினர். மன்னன் அலறியபடி உயிர் துறந்தான்.

மன்னன் இறப்பிற்குப் பின்னர் மக்கள் புத்திசாலியான அந்த மூவரையும் அந்நாட்டின் மன்னர்களாக இருக்கச் சொல்ல அவர்களும் மன்னர்களாக இருந்து சிறப்பாக ஆட்சி செய்தனர்.

# தன்னலமற்றவனே தலைவன்

சந்திரகுப்தரின் மதியாலோசகராக இருந்தவர் கௌடில்யர் எனும் பெயர் கொண்ட சாணக்கியர். அரசியலில் சாணக்கியம் என்ற சொல்லே இவர் பெயரை வைத்துத்தான் உருவானது. அதிகாரம் மிக்க ராஜகுருவாக இருந்தார். போர் வீரர்களில்



ஆதரவாளர்களும், அதிருப்தியாளர்களும் கௌடில்யர் என்னும் பெயரைக் கேட்டாலே தமது சொந்த விருப்பார்வங்களையும் வெறுப்பெரிச்சல்களையும் உதறிவிட்டுப் பவ்வியமாய் நின்றுவிடுவார்கள்.

அவர் மனிதனா, மிருகமா, தேவனா, பேய் பிசாசா? முனிவரா, மந்திரவாதியா? போரில்லாமலே பல மன்னர்களை வீழ்த்திக் காட்டியிருக்கிறார். மாமன்னர் சந்திரகுப்தரே இவரிடம் மயங்கிக் கிடந்திருக்கிறார். அன்போடு கட்டித் தழுவுகிறார். அறநெறிகளை விருப்பம் போல் விளக்கினார். சொற்களால் யாரையும் மடக்கி விடுகிறார்.

வஞ்சகம், சூழ்ச்சி, பொய்ம்மை, புலமைச் செருக்கு... என்று எத்தனையோ முரண்பாடுகளும், சிறுமைகளும் அவரிடம் மண்டிக் கிடந்தாலும் அனைவருமே அவரை மதிப்பதற்கு ஒரு காரணம் இருந்தது.

சொத்து சுகங்களில் பற்றற்றவராய்ச் சின்னஞ்சிறு குடிலில் வாழ்ந்தார். ஏழைகள் உண்ணும் எளிய உணவில் திருப்தியடைந்தார். தன் தாயோ, மனைவியோ, மகளோ, மருமகனோ, தன் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்திவிடக் கூடாது என்பதில் கண்டிப்பாக இருந்தார்.

தவறான மனிதர் கூடத் தன்னலமற்றவனாய் பணத்தாசையவற்றவனாய் இருந்தால், தலைவனாக மதிக்கப்படுவான் என்பதற்கும், எத்தனை அறிவாற்றல் மிகுந்த தலைவனாக இருந்தாலும், சொத்து சுகங்களில் சொக்கிப் போனால், தன் பிள்ளை தன் குடும்பம் என்று சுருங்கிப் போனால், மக்கள் மத்தியில் மதிப்பிழந்து போவான் என்பதற்கும் கௌடில்யர் ஒரு விளக்கமாக விளங்கினார்.

('காருவகி' என்ற வரலாற்று நாவலில்
- இளவேனில் -)

# யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை கரவெட்டி




## எமது பாடசாலை பற்றி...

இப்பாடசாலையானது 1888இல் மெதடிஸ்த திருச்சபையினரால் ஓர் கிறிஸ்தவ பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே. இன்று வடமராட்சியில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளுள் தலையாயதும் தனித்துவம் மிக்கதுமான பாடசாலையாக இது விளங்குகின்றது. இங்கு காலத்திற்குக்காலம் இருந்த அதிபர்களின் முயற்சியினால் முன்பு மட்டுப்படுத்தப்பட்டிருந்த கட்டடவளங்கள் பெற்றோர், நலன்விரும்பிகளின் உறுதுணையால் மூன்று பரப்புக் காணிஒன்று கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டமையினால் சிறப்பான கட்டடம் அமைக்கப்பட்டு இன்று வகுப்பறைகள் போதியளவு கிடைக்கப்பெற்றுள்ளன. எனினும், பழைய ஒன்றுகூடல் மண்டபம் திருத்தியமைக்கப்படுவது உடனடித்தேவையாக உள்ளது. அத்துடன் பழையமாணவர்களின் உதவியுடன் அயலில் உள்ள 1.5 பரப்புக்காணியை கொள்வனவு செய்யத்திட்டமிட்டு அதற்கான பூர்வாங்க வேலைகளைத்தொடங்கியுள்ளோம். இவ்வேலை பூர்த்தியாகும் பட்சத்தில் காலைவேளை உடற்பயிற்சிக்கான மைதானப் பற்றாக்குறை தீர்ந்துவிடும் என்பது நிச்சயம்.



இப்பாடசாலை இடைக்காலத்தில் தரம் 8 வரையிலான வகுப்புக்களைக்கொண்டதாகவும் பின்பு JUK 5 ஆகக் குறைக்கப்பெற்று ஆரம்பப்பாடசாலையாக உயர்வு பெற்று விளங்குகின்றது.

இன்று கல்வியிலும் இணைப்பாடப்புறச்செயற்பாடுகளிலும் சிறப்பாகச் செயற்பட்டு விளங்குகின்றது. மாணவர் வளம் போதியதாக உள்ள போதும் ஆசிரியர்வளம் பற்றாக்குறை யாகவே உள்ளது.

கல்வியமைச்சின் முன்னைய Teacher Cader இன்படி ஆசிரியர் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையினால் 402 மாணவர்களுக்கும் சிறப்பான செயற்பாடுகளை ஆற்றுவதற்கு ஆசிரியர்கள் சிரமப்படுகின்றனர். மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப Teacher cader மீளுருவாக்கம் செய்யப்பட்டு அண்மைய துறைகளான வழிகாட்டலும் ஆலோசனையும் Ict நூலகம், இரண்டாம் மொழிசிங்களம், ஆரம்பக் கல்வி ஆங்கிலம் போன்ற துறைகள் நிரப்பப்படுவது இன்றியமையாதது. இதன்மூலம் பெறுபேறுகள் உயர்வுபெறும் என்பது திண்ணம்.



ஆசிரியர் தினம் - 2011

நிதுஷா ஸ்ருடியோ நெல்லியடி



# யாழ். மாநகரப் பகுதியில் விசேட கழிவகற்றல் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாநகரப்பகுதியில் விசேடகழிவகற்றும்திட்டமொன்று யாழ். மாநகரசபையினரால் நாளை முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவிருப்பதாக யாழ்மாநகர சபையின் சுகாதாரக்குழுவின் தலைவர் எஸ். விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் முற்பகல் 10மணிக்கு யாழ். மாநகர சபையின் சுகாதாரக்குழு அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இத்திட்டம் குறித்து அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் அப்போது இருந்த யாழ். மாநகரசபையிடம் இத்திட்டம் நடைமுறையில் இருந்து வந்ததாகவும் அது பிற்காலத்தில் நிலவிய யுத்த சூழல் காரணமாக செயலற்றுப்போயிருந்ததாகவும் தற்போது யுத்தம் நிறைவடைந்த சூழலில் தமது காலப்பகுதியில் முதல் முதலாக இந்தத்திட்டம் நடை முறைக்குக் கொண்டுவரப்பட இருப்பதாகவும் தெரிவித்தார்.

இத்திட்டத்தின்படி ஏற்கனவே யாழ். மாநகர சபையின் கழிவகற்றும் திட்டம் அதன் தலைமை அலுவலகத்தில் வைத்தே நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் தற்சமயம் அது யாழ். மாநகர சபையின் 24 வட்டாரங்களையும் ஒன்பது வலயங்களாகப் பிரித்து அந்தந்த வலய அலுவலகங்களில் இருந்தே இந்த சுத்திகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

அதாவது இந்த ஒன்பது வலயங்களுக்கும் பொறுப்பாக ஒவ்வொரு சிரேஷ்ட சுத்திகரிப்பாளர் இருப்பர். அத்துடன் அந்த வலயங்களில் அடங்கும் வட்டாரங்களில் எண்ணிக்கைக்கேற்ப ஒவ்வொருவர் (சுத்திகரிப்பாளர்) கடமையில் இருப்பார்கள் இவர்களின் பணி 24 மணிநேரத்திற்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. காலை நடவடிக்கையில் எங்கேயாவது சுத்திகரிப்புப்பணி மேற்கொள்ளப்படவில்லை என்றால் இந்த வலய அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பொதுமக்கள் அறிவிப்பதன் மூலம், அந்தப்பகுதியில் உள்ள கழிவுகள் அகற்றப்பட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மூன்று வேளைகள் இவ்வாறு கழிவகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்த சுகாதாரக் குழுத்தலைவர் தம்மிடம் சுமார் 24 கழிவகற்றும் வண்டிகள் (டிரைக்டர்கள்) இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் நவீன முறையில் கழிவகற்றுவதற்கு யாழ். மாநகரசபையிடம் நிதிபற்றாக் குறையாகவுள்ளதாகவும் அரசாங்கத்திடமும், அசர சார்பற்ற நிறுவனங்களிடமும் இதற்கு உதவுமாறும் கோரியிருப்பதாகத் தெரிவித்தார்.அத்துடன் யாழ். மாநகரசபையினால் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகளில் இருந்து சேதனைப்பசளை (உரம்) தயாரிக்கும் திட்டம் தொடர்ந்து நல்ல வரவேற்பைப் பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் கல்லுண்டாய் வெளியில் யாழ். மாநகரசபையினால் கொட்டப்படும் கழிவுகளுடன் பிரதேச சபைகள் மற்றும் தனியார் துறையினரும் கொட்டுவதாகவும், இதனால் அங்கு சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவதாக பொதுமக்களால் குற்றம் சாட்டப்படுகிறது.

எனவே மாநகர சபையைத் தவிர இதில் வேறு யாரும் கழிவுகளைக் கொட்டாதிருக்க கண்காணிப்பாளர் ஒருவரை நியமித்து 24 மணிநேரமும் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்சமயம் காலையில் இருந்து மதியம் வரை ஒருவர் கண்காணிப்புப் பணிக்கு அமர்த்தப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவித்தார். (பா)

# சாவகச்சேரி பொலிஸாரால் மக்களுக்கான நடமாடும் சேவை

(சிகரம்)

சாவகச்சேரி பொலிஸார் மறவன்புலோ மக்களின் நன்மை கருதி நடமாடும் சேவை ஒன்றினை கடந்த ஞாயிற்றுக்கிழமை மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய மண்டபத்தில் நடாத்தினர்.

இந்த நடமாடும் சேவையில் அடையாள அட்டையினை தவறவிட்டோர், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், மற்றும் கடவுச்சீட்டு போன்ற ஆவணங்களைத்தவறவிட்டோர் மீளவும் அதனைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் தொடர்பான ஆலோசனைகள் பொலிஸா ரினால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.


மறவன்புலோ சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றுச் சென்றனர்.

இந்த நடமாடும் சேவை குறித்து பொது மகன் ஒருவர் கூறுகையில்; பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட இந்த நடமாடும் சேவை மூலம் நாங்கள் தவறவிடப்படும் பொருட்களை மீளப் பெற்றுக் கொள்வது தொடர்பாக அறியக்கூடியதாக இருந்தது. இதற்காக நாம் இந்தக் கிராமமக்களின் சார்பில் பொலிஸாருக்கு நன்றி தெரிவிக்கின்றோம் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அன்றையதினம் நடைபெறவிருந்த ஆயுர்வேத மருத்துவமுகாம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் எதிர்வரும் 3ம் திகதி ஆயுர்வேத மருத்துவமுகாம் உட்பட லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் மருத்துவமுகாம், இலவசகண்ணாடி விநியோகம் என்பனவற்றினை மறவன்புலோ மக்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை தாம் மேற்கொண்டிருப்பதாக குறிப்பிட்ட பொலிஸார்,இது தொடர்பான விபரங்கள் பின்னர் மக்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

# கலாசாரத்தை பாதுகாக்க இளைஞர்கள் முன்வரவேண்டும்



(யாழ்ப்பாணம்)

சீரழிவுப்பாதையை நோக்கிச் செல்லும் எமது கலாசாரத்தைப் பாதுகாக்க இளைஞர்கள், யுவதிகள் முன்வரவேண்டும் என ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும், நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான அம்பலம் இரவீந்திரதாஸன் தெரிவித்துள்ளார்.

அரியாலை தென்கிழக்கு சிவில பாதுகாப்புக் குழுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மணியம் தோட்டம் முன்பள்ளி மண்டபத்தில் யாழ்.பொலிஸ் நிலைய அதிகாரி ஜெயந்த தலைமையில் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யுத்தம் முடிவடைந்து நாட்டில் சமாதானம் ஏற்பட்டுள்ள போதிலும், எமது யாழ்.மண்ணில் இடம்பெற்றுவரும் கலாசார சீரழிவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட வேண்டும்

எமது இன்றைய இளைஞர்கள் யுவதிகள் எமது கலாசாரத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டும். அப்போதுதான் எமது தமிழ் சமூகம் என்றென்றும் நிலைத்திருக்க முடியும். அதன் ஓர்அங்கமாக அமைச் சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கு அமைய சிவில் பாதுகாப்பு குழுக்களை அமைத்து சட்டத்தை நிலைநாட்டி வருகிறோம். சட்டம் எல்லோருக்கும் சமமானது. அதை நாங்கள் சரியாகப பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் நாமும் இம் மண்ணில் தலைநிமிர்ந்து வாழ முடியும் என மேலும் தெரிவித்தார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

மேரி ஷெல்லியின் 'ப்ராங்கன்ஸ்டைன்' (1818). இன்றும் அறிவியல் புனைவுகளில் மீண்டும் மீண்டும் உருவாக்கப்படும் இரு அழுத்தமான படிமங்களை இந்நாவல் இலக்கிய உலகிற்கு அளித்தது. இந்நாவலின் அடிநாதமாக விளங்குவது, மனிதனால் அறியப்படக் கூடாத இயற்கை இரகசியங்களை அறிவியல் அறிவதால் ஏற்படும் மீளா சோகம். இயற்கையை மீறி தான் உருவாக்கிய இயந்திர மனிதனுக்கு தன் மனைவியைப் பறிகொடுத்த டாக்டர் விக்டர் ப்ராங்கன்ஸ்டைனின் இதய வேதனை. பிற்காலத்தில் ரோபோக்கள் பொதுவாகவே தம் நிலை இழந்து வில்லத்தனம் அடையும் பல புனைவுகளுக்கும் திரைப்படங்களுக்குமான மூலத்தை ப்ராங்கன்ஸ்டைனில்காணலாம். ஐஸக் அஸிமோவ் தன் அறிவியல் புனைவுகளிலேயே ரோபோக்களை வெறுக்கும், தொழில்நுட்பத்தை வெறுக்கும் மனநிலைக்கு 'ப்ராங்கன்ஸ்டைன் கொம்ப்ளக்ஸ்' எனும் பதத்தை பயன்படுத்தினார்.

"ஓர் புதிய இனம் என்னை அதன் சிருஷ்டி கர்த்தாவாக கொண்டாடும். பற்பல புதுமையான சிருஷ்டிகள் என்னால் உருவாக்கப்படும். எந்த தகப்பனும் தன் குழந்தைகளிடமிருந்து பெற முடியாத முழுமையான நன்றியினை நான் என் படைப்புகளிடமிருந்து பெறுவேன்.

... ...

எத்தகைய மூட கனவுகள் என்னை வழிநடத்தி விட்டன. இப்படைப்பு என் மூர்க்கத்தனத்தின் விளைவு என்னால் அதை பார்க்க சகிக்கவில்லை."

**– மேரி ஷெல்லியின் 'ப்ராங்கன்ஸ்டைன்' நாவலிலிருந்து (1818)**

'...அவர்களின் எண்ணங்களை நான் அறிய முடியும். ஏனெனில் மனித மன அலைக்கு ஏற்ப என் பாகங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. ஆனால் அவர்கள் என்னை அறிந்து கொள்ள இயலாது. என் மொழி அவர்களுக்கு பொருளற்றதாயிற்று. பக்குவமடையாததாலோ அல்லது வேறு ஏதோ காரணங்களாலோ தெரியவில்லை, அவர்களால் என் மன அலைகளை தம் மனதுள் பெற்றுக்கொள்ள இயலவில்லை.

...

இயந்திரங்களுக்கு பயப்படும் மனிதர்கள்! நினைத்துப் பார்க்க முடியவில்லை. ஏன் இந்த அச்சம்? மனிதர்களுக்காக எழுந்த ஓர் உதவி சாதனம்தானே இயந்திரங்கள்? ஒரு வேளை நான் அவர்கள் மன அலைகளை சரியாக பெறவில்லையோ? ... நான் அறிவேன், இந்தப் பைத்தியக்கார உலகில் ஓர் அறிவுள்ள இயந்திரத்தின் வாழ்வு எத்தகையது என்பதனை.

**– ஜோன் வின்ட்'ாமின் 'இழந்த இயந்திரம்' சிறுகதை யிலிருந்து.**

நாஸிகளின் அட்டூழியங்கள் வெளிவருவதற்கு முன் அல்டாஸ் 'க்ஸ்லியால் எழுதப்பட்ட நாவல் 'வீரமிகு புத்துலகம்' (1932). நாஸிகள் தங்கள் சர்வாதிகார அமைப்பினை நிலைநிறுத்த தொழில்நுட்பத்தை எவ்வாறெல்லாம் பயன்படுத்தி உள்ளனர் என்பது தம் கற்பனையை ஒத்தும் அதனை தாண்டியும் இருந்ததை கண்டு வியந்தஞ்சி அவர் எழுதிய கட்டுரைத் தொகுப்பு 'புத்துலகம் – ஓர் மறுபார்வை' (1958).

'ஆனால் நான் துன்பங்களை வரவேற்கிறேன்', என்றான் சாவேஜ்.

'ஆனால் நாங்கள் வரவேற்பதில்லை' என்றான் கட்டுப்படுத்துவோன், 'நாங்கள் சுகமான விஷயங்களை செய்ய விரும்புகிறோம்'.

'இல்லை எனக்கு சுகம் தேவையில்லை. எனக்கு இறை வேண்டும், உண்மையான ஆபத்துக்கள் வேண்டும், கவிதைகள் வேண்டும், சுதந்திரம் வேண்டும், புண்ணியம் வேண்டும், பாவமும் வேண்டும்.' என்றான் சாவேஜ்.

எனில் வாஸ்தவத்தில் நீ விரும்புவது துக்கத்தைத் தான்.' என்றான் முஸ்தபா மாண்ட்.

'சரி அப்படியே வைத்துக்கொள்ளேன்' சாவேஜின் குரலில் கீழ்ப்படியாமை தெள்ளத்தெளிவாய் தெரிந்தது, 'நான் துக்கமாக இருப்பதற்கான எனது உரிமையை கோருகிறேன்.'

'ஓ, அந்த உரிமை மட்டுமா? வயதாகி ஆண்மை இழந்து அசிங்கமாகும் உரிமை; பால்வினை நோயையும் புற்று நோயையும் சுமந்து திரியும் உரிமை; வயிறு நிறைய உண்ணக் கூட உணவு கிடைக்காதிருக்கும் உரிமை; தீராத அச்சத்துடன் நாளையை நிச்சயமற்ற தன்மையுடன் எதிர் நோக்கும் உரிமை; குடல் ஜுரத்துக்கான உரிமை; நினைத்துப்பார்க்க முடியாத அனைத்து இன்னல்களுக்கும் தன்னை ஆட்படுத்திக்கொள்ளும் உரிமை.'

ஓர் நீண்ட மௌனம் அங்கு நிலவியது.

அம்மௌனத்தை கிழித்தது சாவேஜின் குரல். 'ஆம் அந்த உரிமைகள் அனைத்தையும் தான் – அந்த உரிமைகள் அனைத்தையும் கோருகிறேன்'.

**– ஆல்டஸ் 'க்ஸ்லியின் 'வீரமிகு புத்துலகம்' (1932)**

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் 16ஆயிரம் பேருக்கு வீடுகள் இல்லை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்த பாதிப்பினால் தமது வீடுகளை இழந்த மக்களில் இன்னமும் பதினாறாயிரம் பேருக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது. அதற்கான முயற்சிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கிளிநொச்சி - அறிவியல் நகரில் அமைக்கப்பட்ட 47 வீடுகளுக்கான ஆவணங்களை மக்களுக்கு வழங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை எட்டாயிரம்பேர் நிரந்தர வீடுகளைப் பெற்றுள்ளனர். இவ்வாறான சூழலில் கிளிநொச்சி மாவட்டத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியான அறிவியல் நகர் பகுதியில் இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட வீடுகளில் இன்று சுமார் 47 வீடுகளை யுத்த பாதிப்புக்களை எதிர் கொண்ட மக்களில் ஒரு தொகுதியினருக்கு வழங்குவதில் நாம் மகிழ்வடைகின்றோம்.

இதேவேளை யுத்தப் பாதிப்புக்களை எதிர் கொண்ட மக்களில் சுமார் ஐம்பதாயிரம் குடும்பங்களுக்கு இந்திய அரசாங்கம் வீடுகளை அமைத்துத்தர முன்வந்துள்ளது. அதில் முதற்கட்டமாக ஆயிரம் வீடுகளை வடமாகாணத்தில் அறிமுகப்படுத்தியது. இவற்றில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 89 வீடுகள் அமைக்கப்பட்டன. இந்நிலையில் இந்திய அரசாங்கத்தினால் வாக்குறுதியளிக்கப்பட்டதற்கமைவாக ஏனைய வீடுகளை மக்களுக்கு அமைத்துக் கொடுப்பதற்கான இறுதிக் கட்டப்பணிகள் முடிவடைந்து அடுத்துவரும் சில வாரங்களில் வீடமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனவே நீண்ட கால யுத்தத்தின் பாதிப்பை எதிர் கொண்டு மீளெழத்துடிக்கும் எம்மக்களுக்கு தொடர்ந்தும் பல்வேறு உதவிகளை வழங்கி வரும் இந்திய அரசாங்கத்திற்கு எம் மக்களின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

கரைச்சி பிரதேச செயலகத்தில் பிரதேசசெயலர் நாகேஸ்வரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கரைச்சி பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் அமல்ராஜ், கிளிநொச்சி மாவட்ட தலைமை உதவி அரச அதிபர் ஜெயராணி, ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் ஆகியோரும் கிராம சேவையாளர்களும் வீட்டுத் திட்டப் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

# கடனைப் பெறுவதில் வாடிக்கையாளர்கள் சிரமம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இலங்கை வங்கியில் தற்போது வாடிக்கையாளர்களின் வருகை வீதம் குறைவடைந்துள்ளதுடன், வங்கியூடாக கடனைப் பெறுவதிலும் சிரமங்களுக்குள்ளாவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இவ்வங்கியூடாக வாடிக்கையாளர் கடனைப் பெறுவதாயின், வங்கிக்கும் வாடிக்கையாளருக்குமான செயற்பாடு மூன்று மாதகாலமாக இழுத்தடிக்கப்படுவதாகவும் அதன் பின்னரே கடனைப் பெற்றுக்கொள்வதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் இவ்வங்கியூடாக கடனைப் பெறும் சிலர்,சரியான முறையில் திருப்பிச்செலுத்தாததாலேயே கடனை வழங்குவதில் இறுக்கமான நடைமுறைகளைப் பயன்படுத்துவதாக வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வாடிக்கையாளரின் நலனைக் கருதி வங்கி ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொண்டால் சிறந்த வாடிக்கையாளர் சேவையினை இவ்வங்கிக்கிளை பெறும் எனவும் மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர். (77)

# வடக்கு அதிகாரிகளுக்கு தெற்கில் சிறப்பான வரவேற்பு

(அரியாலை)

யாழ்.மாவட்டத்திலிருந்து கிராமப்பயிற்சிக்காக தென் மாகாணத்திற்கு சென்ற அதிகாரிகள்குழுவினருக்கு தென்மாகாணத்திலுள்ளவர்கள் சிறப்பான முறையில் வரவேற்பளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நிர்வாகசேவை (SLAS) தரம் iii பதவி அணியில் நியமிக்கப்பட்ட 260 அதிகாரிகள்குழு இறுதிப்பயிற்சியான கிராமப் பயிற்சிக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள மாவட்டப் பகுதிகளுக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டனர்.

இதில் சிங்கள மொழி பேசும் மக்கள் வாழும் தென்மாகாணத்திலுள்ள மாத்தறை அரச அதிபர் பணிமனைக்கு சென்ற[illegible] தமிழ் அதிகாரிகளும் சிறப்பான முறையில் பணிமனை அதிகாரிகளால் வரவேற்கப்பட்டதாகவும் உபசரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (23)

# வீதி அகலிப்புக்காக மின்தடை அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயர்அழுத்த மின்மார்க்கங்களை இணைக்கும் வகையில் பின்வரும் பிரதேசங்களில் மின் தடைப்படவுள்ளது. இதன்படி கே.கே.எஸ் வீதியில் மனோகரா திரையரங்கு முதல் தபாற்கந்தோர் வரையான இடங்களில் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமை, நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும்,

நாவற்குழிப் பிரதேசம், கோவிலாக்கண்டி, மறவன்புலோ, தச்சந்தோப்பு, தனங்கிளப்பு ஆகிய இடங்களில் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் மின்தடைப்படவுள்ளது.

மேலும் புத்தூர், ஆவரங்கால், வீரவாணி, வாதரவத்தை ஆகிய இடங்களில் இன்று வெள்ளிக்கிழமையும், 03 ஆம் திகதி திங்கட்கிழமை, 5ஆம் திகதி புதன்கிழமை மற்றும் 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் மின் தடைப்படும்.

அராலிப்பிரதேசத்தில் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 06ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# மீள்குடியமர்ந்த மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செம்பிறை செஞ்சிலுவைச் சங்கங்களின் சம்மேளனத்தினால் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் மேற்பார்வையில் வலி. வடக்கு தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், வலிகாமம் கிழக்கு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், மீள்குடியமர்ந்த மக்களுக்காக நீர்வழங்கல் திட்டம் உதவி அரசாங்க அதிபர்கள் வழிகாட்டலில் நடைபெறுவதற்கான செயற்பாடுகள் தொடங்கப்பட்டுள்ளன.

வலி.வடக்கு தெல்லிப்பளைப் பிரிவில் பாரிய அளவில் சேதமடைந்த 16 கிணறுகளையும், சிறிய அளவில் சேதமடைந்த 15 கிணறுகளையும் திருத்தி அமைப்பதற்கும் 10 குழாய்க்கிணறுகளை புதிதாக அமைத்துக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் அண்ணளவாக 40 மலசலகூடங்கள் அமைப்பதற்காக ஆவன செய்யப்படுகின்றது. இவற்றை நிர்மாணிப்பதற்காக காணிச் சொந்தக்காரருக்கு படிப்படியாக வேலை முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.




நெல்லியடி கொமர்ஷல் வங்கி நடத்திய சாதனை மாணவர் கௌரவிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது, நெல்லியடி கொமர்ஷல் வங்கி முகாமையாளர் எஸ்.கஜரூபன் உரையாற்றுவதையும், அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழிமூல புலமைப்பரிசில் பரீட்சையில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட சேதுராகவன் பரமேஸ்வரனை வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் என்.ரஜீவன் பாராட்டிக் கௌரவிப்பதையும் காணலாம். (01)


## முரசின் இன்றைய பலன்

(31.08.2012 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் ஆவணி மாதம் 15 ஆம் திகதி. பூரணை முன்இரவு 08.09வரை
சித்தயோகம் நட்சத்திரம் அவிட்டம் காலை 6.31 வரை.
இராகுகாலம் 10.35 - 12.05 வரை. சுபநேரம் 6.05 - 7.35 வரை.
எமகண்டம் 2.56 - 4.26 வரை. குளிகன் காலம் 7.26 - 8.56 வரை.
பூரணை விரதம்

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நல்லசம்பவங்கள் நடக்கும், காரியசித்தி, பெரிய மனிதர்களின் ஆசிகள், வெற்றிகரமானநாள். |
| ரிஷபம் | பிரச்சினைகள் தீர்வு, பொருட் சேர்க்கை, சகோதரபாசம், ஆதாயமான நாள். |
| மிதுனம் | தொழில் ரீதியாகச் சந்திப்பு, கணவன் மனைவி விரோதம், வீண் பழிசேரும், செலவு அதிகம். |
| கடகம் | எதிர்பாராத விஷயங்கள் நடக்கும், கூட்டுத் தொழிலில் அவதானம், புதிய அனுபவங்கள். |
| சிம்மம் | புதிய முயற்சிகள்தவிர்க்கவும், நண்பர்கள் அதிருப்தி, தடைதாமதங்கள், பொறுமை அவசியம். |
| கன்னி | மறக்க முடியாத நிகழ்சிகள் ஏற்படும், எதிர் பாரா ஆதாயம், நண்பர் உதவி, ஓய்வு. |
| துலாம் | காரியங்கள் குழப்பம், பிரச்சினைகளைச் சந்திப்பீர்கள், தடைகளால் கவலை, தொழிலில் உதவி. |
| விருச்சிகம் | செயற்பாடுகளில் வெற்றி, வராத உறவினர் தேடிவருவார், ஆதாயம். |
| தனுசு | பாராட்டுக்களைப் பெறுவீர்கள், நீடித்த குழப்பம் தீரும், கடன்தீரும், அலைச்சல். |
| மகரம் | நல்ல நிகழ்வுகள் நடக்கும். சாமர்த்தியமாக நடந்து கொள்வீர்கள், குடும்ப அன்யோன்யம், |
| கும்பம் | வீண் பேச்சுக்களைத் தவிர்க்கவும், நீண்ட நாள் ஆசை நிறைவு, பிடிவாதமாக நடப்பீர் |
| மீனம் | பணியில் உற்சாகம், மறதியால் அவதி, எதிர் பாராத உதவி, நல்ல செய்திகள் வரும். |

27. 


1) BACD 2) CDAB 3) BCAD

➽ ஒரு நீளமான வாங்கில் ருதைன், திவாகர், தனுஷ், சஜன், சஞ்சீவன், அஸ்வின் ஆகியோர் அமர்ந்திருக்கும் விதத்தை, அவர்களுக்கு முன்னால் நிற்கும் நதா பின்வரும் தகவல் மூலம் கூறினாள்.

- எனது இடப்புறமிருந்து பார்க்கும்போது நான்காவதாக தனுஷன் அமர்ந்துள்ளான்.
- தனுஷனுக்கு வலது புறமாக இருவர் தள்ளி தினேஷ் அமர்ந்துள்ளான்.
- தினேசுக்கும் தனுஷனுக்கும் இடையில் திவாகர், ருதைன் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.
- திவாகருக்கு அருகில் தினேசும் இருவர் தள்ளி சஜனும் அமர்ந்துள்ளனர்.
- சஜனுக்கும் அஸ்வினுக்கும் நடுவில் சஞ்சீவ் அமர்ந்துள்ளான்.

28. இவ்வரிசையில் சரி நடுவில் அமர்ந்திருப்பவர் யார்?

1) தனுஷ் 2) அஸ்வின் 3) ருதைன்

➽ கீழேயுள்ள அட்டவணையில் 0 தொடக்கம் 9 வரையான ஒவ்வொரு இலக்கத்திற்கும் ஒவ்வொரு ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி கீழே கேட்கப்பட்டுள்ள 29, 30, 31 ஆம் வினாக்களின் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| K | A | P | M | S | V | R | B | D | E |

29. AP + RB + VK =...........

1) ABK 2) APE 3) EPA

30. SVP - PDK =...........

1) PAB 2) MVE 3) ABP

31. MRB x V =...........

1) ADMV 2) VDAV 3) ADVM



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012


பகுதி - I
நேரம் 1.15 நிமிடம்




# கல்வி முரசு

இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

01. எரிபொருளில் இயங்கும், பயணிகளை ஏற்றிச் செல்லும், சமுத்திரத்தில் பயணம் செய்யும்.




02. வெளிநாட்டு இறக்குமதி, தாவரத்திலிருந்து பெறப்படும், சுவையானது.




➽ பின்வரும் பாடல் வரிகளை வாசித்து 03 ஆம் 04 ஆம் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

பாலும் எனக்குத் தேவையில்லை
பழமும் எனக்குத் தேவையில்லை
சோலை எங்கும் கூவி நிதம்
சுற்றித் திரிதல் போதுமப்பா


03. இவ்வெண்ணங்கள் தோன்றுவது,

1) சிறுபிள்ளைகளிடத்தில் 2) பிச்சைக்காரனிடத்தில்
3) கூண்டுப் பறவையிடத்தில் 4) பறந்து திரியும் பறவையிடத்தில்

04. இப்பாடலின் மூலம் கேட்கப்படுவது


1) உணவு 2) விடுதலை 3) அன்பு 4) கருணை

➽ கோலத்தை அவதானித்து வெற்றிடங்களுக்குப் பொருத்தமான பெறுமானத்தைக் காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.

05. 


1) 8
2) 16
3) 10

➽ வினாக்களில் காட்டப்பட்டுள்ள எண் கோலத்திற்கு ஏற்ப வினாக்குறி (?) உள்ள அடைப்புக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

06. 


1) 1
2) 2
3) 3

➤ வினாவில் கூறப்படும் ஆலோசனைகள் ஏன் பின்பற்ற வேண்டும் என்பதற்கான பொருத்தமான காரணங்களைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

07. ஐந்து வயதிலும் குறைந்த பிள்ளைகளைக் கட்டாயமாக முன்பள்ளி பாடசாலைக்கு அனுப்புதல் வேண்டும்.
1) ஐந்து வயதிலும் குறைந்த பிள்ளைகளை வீட்டில் வைத்துப் பராமரிப்பது சிரமம் என்பதால்
2) தாய்க்குச் சுதந்திரமாக வீட்டு வேலைகளைச் செய்ய முடியும் என்பதால்
3) பிள்ளையைப் பராமரிப்பதற்கு வீட்டில் வேலையாட்கள் இல்லை என்பதால்
4) பாடசாலைக் கல்விக்குத் தேவையான முன் அனுபவங்களைப் பெறும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக.

➤ பின்வரும் வினாக்களின் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

08. பிள்ளைகள் மூத்தோருக்கு மரியாதை செய்யப் பழக வேண்டும். இதற்குரிய காரணமாக அமைவது,
1) மூத்தோரினால் பிள்ளைகளுக்குத் தண்டனை வழங்க முடியும் என்பதனால்
2) மூத்தோர் சுகயீனமுற்றவர்களாக இருப்பதனால்
3) மூத்தோர் பிள்ளைகளைவிட அனுபவம் அதிகமுடையவர்களாக இருப்பதனால்

09. ஓர் எண்ணுடன் 5 ஐக் கூட்டிவரும் விடையை, 3 ஆல் பெருக்கி, வரும் விடையிலிருந்து 2 ஐக் கழித்தால் வரும் விடை 43 எனில், அந்த குறித்த எண் எது?
1) 10 2) 15 3) 23

10. இந்த வருடம் அனுலாவின் வயது குருவின் வயதின் மூன்று மடங்காகும். இன்னும் இரு வருடங்களின் பின் அனுலாவின் வயது குருவின் வயதின் இரு மடங்காகும் எனில், அனுலாவின் தற்போதைய வயது என்ன?
1) 3 2) 5 3) 6

11. சனுஜன் பின்வருமாறு கூறினான். "நான் குடும்பத்தில் மூத்த பிள்ளையிலிருந்து 5வது பிள்ளை, கடைசிப் பிள்ளையிலிருந்து மூன்றாவது பிள்ளை" இவனது குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?
1) 7 2) 8 3) 9

12. ஒரு பையினுள் 8 சிவப்புநிற மாபிள் குண்டுகளும், 3 மஞ்சள் நிற மாபிள் குண்டுகளும் உள்ளன. இதில் ஒரு மஞ்சள் நிற மாபிள் குண்டை குறைந்தது எத்தனையாவது தடவை எடுக்கலாம்?
1) 8 2) 9 3) 10

13. 4 மனிதர்கள் 2km நீளமான வாய்க்கால் ஒன்றை 2 நாட்களில் வெட்டி முடித்தனர். ஒரு மனிதன் அந்த வாய்க்காலை எத்தனை நாட்களில் வெட்டி முடிக்கலாம்?
1) 6 நாட்கள் 2) 8 நாட்கள் 3) 10 நாட்கள்

14. தாவரத்தண்டின் அடியிலுள்ள வேரில் பூத்துக் காய்க்கும் தாவரம் எது?
1) விளிம்பி 2) பலா 3) ஜம்பு மரம் 4) நெல்லி மரம்

15. சூரியகாந்திப் பூக்களை ஒத்த வடிவமுள்ள பூக்கள் கொண்ட தாவரம் எது?
1) திருக்கொன்றை 2) அன்னமுன்னா 3) முக்குத்திப் பூண்டு 4) எள்ளு

16. பலாக்காய் வெட்டும்போது கத்தியில் ஒட்டியுள்ள பலாப்பிசினை அகற்ற உதவும் பதார்த்தம் எது?
1) மண்ணெண்ணெய் 2) சவர்க்காரம் 3) தேங்காய் எண்ணெய் 4) தின்னர்

17. தனக்குத் தேவையான போசணைப் பதார்த்தங்களில் ஒன்றைப்பெற பூச்சிகளில் தங்கியிருக்கும் பூச்சியுண்ணித் தாவரம் எது?

1) 
2) 
3) 
4) 




18. கறிவகைகள் சமைக்கும்போது, கறிவேப்பிலையை எந்தவேளை சேர்க்க வேண்டும்?
1) அடுப்பில் வைப்பதற்கு முன்பு 2) அடுப்பில் கறி இருக்கும்போது
3) அடுப்பிலிருந்து இறக்கியவுடன் 4) அடுப்பிலிருந்து இறக்கி கறி ஆறிய பின்

➤ கீழே தரப்பட்ட 19 - 23 வரையிலான சொற் கூட்டங்களில் ஏனையவற்றில் இருந்து ஒரு சொல் மாத்திரம் வித்தியாசமானது அச்சொல்லை தெரிவு செய்து கோடிடுக.

19. 1) பாடசாலை 2) மைதானம் 3) ஆசிரியர் 4) கடிதம்
20. 1) பழம் 2) வேர் 3) காய் 4) பூச்சி
21. 1) சதுரம் 2) வட்டம் 3) செவ்வகம் 4) முக்கோணம்
22. 1) வானம் 2) நட்சத்திரம் 3) இரவு 4) சூரியன்
23. 1) பூசனி 2) புடோல் 3) பீர்க்கு 4) வெண்டி

24. A,B ஆகிய இரண்டு தட்டிலும் உள்ள மெழுகுதிரிகள் ஒரே அளவானவை-இரண்டையும் ஒரே நேரத்தில் எரியச் செய்து இரண்டும் வெவ்வேறு அளவுடைய போத்தல்களினால் ஒரே நேரத்தில் மூடப்பட்டது. இதன் போது முதலில் அணைந்த மெழுகுதிரி எது?

சிறிய போத்தல்

பெரிய போத்தல்
A B

1) A தட்டில்உள்ள மெழுகுதிரி
2) B தட்டில் உள்ள மெழுகுதிரி
3) A,B ஆகிய இரண்டு தட்டிலும் உள்ள மெழுகுதிரி ஒரே நேரத்தில் அணைந்தது.

➤ கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் சொற்களும் அச்சொற்களுக்குரிய குறியீடுகளும் தரப்பட்டுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| △ பாடசாலை | ✡ ஓர் | □ மிகவும் | ○ வீட்டுத் | # கலைவிழா |
| ✳ தீவு | ◎ கவர்ந்தது | ▲ அழகிய | ☆ அனைவரையும் | ⊡ உள்ளது |
| Ⓐ பெற்றோரை | ❂ எங்கள் | ⊠ இலங்கை | ⊗ தோட்டம் | ⚠ ஆகும் |

மேலே தரப்பட்ட தகவலைக் கருத்திற் கொண்ட வாக்கியம் ஒன்றினை அமைக்கப் பயன்படுத்தப்பட்ட குறிகள் 25ஆம் 26 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ளன. வாக்கியத்தினைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமற்ற குறிகளின் கீழ்க் கோடிடுக.

25. ⊠ ❂ ✡ ▲ ✳ ☆ ⚠

26. ❂ △ # ▲ ☆ Ⓐ ◎

# கலவரத்தை கட்டுப்படுத்த அசாம் அரசு தவறிவிட்டது




(புதுடில்லி)

கலவரத்தைக் கட்டுப்படுத்த, அசாம் மாநில அரசு சார்பில் போதிய நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என மத்திய உளவுத்துறை புகார் கூறியுள்ளது.

மத்திய உளவுத்துறை வட்டாரங்கள் கூறியதாவது; அசாமில், கலவரம் தொடங்கியபோதே அதைக் கட்டுப்படுத்த, மாநில அரசு தவறி விட்டது. தொடர்ந்து கலவரம் நடந்தபோதும், கலவரத்தில் தொடர்புடையவர்களை, முன் எச்சரிக்கையாக கைது செய்வதில் அரசு தரப்பில் தீவிரம் காட்டவில்லை. வன்முறையை முன்வைத்து, பல்வேறு அமைப்புகள், "பந்த்" நடத்துவதற்கு அழைப்பு விடுத்தன. இதற்கு மாநில அரசு தொடர்ந்து அனுமதி அளித்தது. கலவரத்தைக் கட்டுப்படுத்தத் தவறிய அதிகாரிகள் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவ்வாறு, உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. ஒரிசாவின் கந்தமாலில் கலவரம் நடந்தபோது, அதை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும் புலனாய்வு அமைப்பு ஒப்பிட்டுக் கூறியுள்ளது.

இதற்கிடையே, கலவரத்தைக் கட்டுப்படுத்துவது குறித்து, முதல்வர் தருண் கோகோய் தலைமையில் நேற்று முன்தினம் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு பின், தருண் கூறியதாவது: கலவரம் தொடர்பாக, சில அமைப்புகள் "பந்த்" நடத்துவதற்கு அழைப்பு விடுக்கின்றன. இதில், வன்முறை நிகழ்கிறது. எனவே, இனிமேல், "பந்த்" நடத்துவதற்குத் தடை விதிக்கப்படுகிறது. சட்ட விரோதமாகப் பதுக்கி வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களை பறிமுதல் செய்வதற்கும், நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கலவரம் தொடர்பாக, குறிப்பிட்ட சில முக்கியமான பணிகளில் மட்டுமே, இராணுவத்தினர் ஈடுபடுத்தப்படுவர். இவ்வாறு தருண் கோகோய் கூறினார்.




இந்தியச் செய்திகள்

# கசாப்புக்கு தூக்குத்தண்டனை; உச்சநீதிமன்றம் முடிவு




(மும்பை)

மும்பையில் கடந்த 2008ஆம் ஆண்டு பாகிஸ்தானைச் சேர்ந்த லஸ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 166 பேர் பலியானார்கள். தாக்குதலில் ஈடுபட்ட 9 தீவிரவாதிகளை பாதுகாப்பு படை வீரர்கள் சுட்டுக் கொன்றனர். அப்போது தீவிரவாதி அஜ்மல் கசாப் மட்டும் உயிருடன் பிடிபட்டான்.

இவ்வழக்கை விசாரித்த மும்பை தனிநீதிமன்றம் அஜ்மல் கசாப்புக்கு கடந்த 2010ஆம் ஆண்டு மே 6ஆம் திகதி மரண தண்டனை விதித்தது. பின்னர் அஜ்மல் கசாப்புக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை மும்பை உயர்நீதிமன்றம் உறுதி செய்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து அஜ்மல் கசாப் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்தான். இதை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அஜ்மல் கசாப்புக்கு தனிநீதிமன்றம் விதித்த தூக்கு தண்டனையை உறுதி செய்தனர்.

உச்ச நீதிமன்றம் அஜ்மல் கசாப்பின் தூக்கு தண்டனையை உறுதி செய்ததை அறிந்ததும் மும்பையில் உள்ள பாரதீய ஜனதா, சிவசேனா தொண்டர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். ஒருவருக்கொருவர் இனிப்பு வழங்கினார்கள்.


ஏராளமானோர் பட்டாசு கொளுத்தி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். தீர்ப்பு பற்றி மராட்டிய முதல் - மந்திரி பிரிதிவிராஜ் சவான் கூறும்போது, இவ்வழக்கில் மராட்டிய அரசு சார்பில் பல்வேறு ஆதாரங்களை திரட்டி நீதிமன்றில் சமர்ப்பித்தோம். கசாப்புக்கு உச்ச நீதிமன்றம் தூக்கு தண்டனை அளித்திருப்பது வரவேற்கத்தக்கது. இந்த தீர்ப்பால் மராட்டிய மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் என்றார்.



**சென்னையில் பழம் பெரும் இசையமைப்பாளர்கள் விஸ்வநாதன் - ராமமூர்த்தி ஆகியோருக்கு நடந்த பாராட்டு விழாவில் முதல்வர் ஜெயலலிதா கலந்து கொண்டு பரிசு வழங்கினார்.**

# இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியா பயிற்சியளிக்கக் கூடாது

## - இளைஞர் காங்கிரஸ் தலைவர் -




தமிழர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் இலங்கை இராணுவத்தை ஊட்டி - வெலிங்டன் இராணுவ பயிற்சி மையத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும். இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவின் எந்தப் பகுதியிலும் இந்தியா பயிற்சி அளிக்க கூடாது என தமிழ்நாட்டு இளைஞர் காங்கிரஸ் தலைவர் யுவராஜா தெரிவித்தள்ளார். ஈரோட்டில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

இலங்கை நேசநாடு என்று மத்திய இணை மந்திரி பல்லம் ராஜூ கூறியிருக்கிறார். ஆனால் இலங்கை நம்மை நேசநாடாகப் பார்க்கவில்லை. தமிழக மீனவர்களை ஈவு இரக்கம் இல்லாமல் தாக்குவதற்கே இந்த இராணுவத்தைப் பயன் படுத்துகிறார்கள்.

நிலக்கரி ஒதுக்கீட்டில் ரூபா 1 இலட்சத்து 86 ஆயிரம்கோடி ரூபா மத்திய அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக சி.ஏ.ஜி. அறிக்கையில் கூறப்பட்டிருப்பது கற்பனையானது. இதில் உண்மை இல்லை. இதுதொடர்பாக பிரதமர் மன்மோகன்சிங் விளக்கம் அளித்துவிட்டார். மேலும் இந்த விவகாரத்தினை நாடாளுமன்றத்தில் கிளப்பும் பா.ஜ.க. விவாதத்துக்கு அழைத்தும் தயங்குகிறது. இதில் இருந்தே மக்கள் புரிந்து கொள்வார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# மத்திய அரசின் முடிவுகளில் தி.மு.க.வுக்கு பங்கு உள்ளது



மத்திய அரசு எடுக்கும் அனைத்து முடிவுகளிலும், தி.மு.கவிற்கு பங்கு இருப்பதாக தமிழக பா.ஜ தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் குற்றம்சாட்டியுள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது-

இந்தியாவின் எந்தவொரு பாகத்திலும், இலங்கை இராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளிக்கக் கூடாது என வலியுறுத்துகிறோம். மத்திய அரசு எடுக்கும் அனைத்து முடிவுகளிலும், தி.மு.க.விற்கு பங்கு இருப்பதை, தமிழக மக்கள் உணர்ந்துள்ளனர். இலங்கை தமிழர்களுக்கு எதிராகவும், பிற்காலத்தில் இந்தியாவிற்கு எதிராக பயன்படும், எந்தப் பயிற்சிகளையும், இலங்கையை சார்ந்த யாருக்கும் அளிக்க கூடாது என்றார்.

# காஷ்மீரில் துப்பாக்கிச் சண்டை

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் அனந்த்நாக் மாவட்டம், குவாசிக்குந்த் கிராமத்தில் பயங்கரவாதிகளுக்கும், பாதுகாப்பு படையினருக்கும். இடையே துப்பாக்கிச் சண்டை நடந்து வருகிறது. இந்த சண்டையில் இரு தரப்பிலும் உயிர் சேதம் குறித்து தகவல் இல்லை. காஷ்மீர் மாநிலம், அனந்த்நாக் மாவட்டம் குவாசிகுந்த் அருகே லமாத் கிராமத்தில், இரு பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக, பாதுகாப்பு படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, பாதுகாப்பு படையினர் நேற்று அங்கு விரைந்து சென்றனர். அங்கு குறிப்பிட்ட பகுதியில், பதுங்கியிருந்த பயங்கரவாதிகளுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை துவங்கியது. இதில், இரு தரப்பிலும் உயிர்ப் பலி ஏற்பட்டதாக தகவல் ஏதுமில்லை. அங்கு, ஒன்று அல்லது இரு பயங்கரவாதிகள் பதுங்கியிருக்கலாம் என பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர். இரு தரப்பினருக்கும் இடையே தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை நடந்து வருகிறது.

வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : பு. மிதுனா

முகவரி: வி.சி.சி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை.




அகவை 6 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# அமெரிக்கப்படைகளால் ஒசாமா சுடப்படவில்லை

## - சர்ச்சையைக் கிளப்பும் புத்தகம்




அமெரிக்க அதிரடிப் படையினர் நுழையும் முன்பே, அபோதாபாத் பங்களாவில், அல்-கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன் இறந்து கிடந்தார் என அமெரிக்கக் கடற்படைவீரர் எழுதியுள்ள புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவலால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

சர்வதேச பயங்கரவாதியும், அல்-கொய்தா தலைவருமான ஒசாமா பின்லேடன், கடந்த ஆண்டு மே மாதம், பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் சுட்டுக்கொல்லப்பட்டார். அமெரிக்கக் கடற்படை பிரிவின் (சீல்) முன்னாள் அதிகாரி மார்க் பிஸ்சோனெட் என்பவர், 'மார்க் ஒவன்' என்ற புனைப் பெயரில், ஒசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பற்றிய புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார்.

அடுத்த மாதம் வெளியாகவுள்ள இந்தப் புத்தகத்தில் எழுதியுள்ள விபரங்கள், மெயில் ஆன்லைன் என்ற இணையத் தளப பத்திரிகையில் வெளியாகியுள்ளது. அதில், அபோதாபாத் பங்களாவில், அமெரிக்க படையினர் நுழையும் முன்பே, ஒசாமா பின்லேடன் இறந்து கிடந் தார். அவரது மார்புப் பகுதியில் அதிரடிப் படையினர் சுட்டனர். எதிர்த் தாக்குதலுக்குக் கூட தயாராக இல்லாத நிலையிலேயே ஒசாமா பின்லேடன் இருந்தார். அந்த அறையில் கிடந்த துப்பாக்கிகளில் குண்டுகள் இல்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் புத்தகம், வெளியாகும் முன்பே பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. புத்தகத்தில் கூறப்பட்டுள்ள சம்பவங்களைப் பார்க்கும் போது, அபோதாபாத் பங்களாவில், ஆயுதங்களுடன் தாக்குதல் நடத்தும் எண்ணத்தில் இருந்த ஒசாமா பின்லேடனைச் சுட்டு வீழ்த்தியதாக அமெரிக்கா கூறி வந்த குட்டு தற்போது உடைபட்டுள்ளது. இந்தப் புத்தகத்தை எழுதிய அந்த எழுத்தாளருக்கு தற்போது மிரட்டல்கள் வந்து கொண்டிருப்பதாக அமெரிக்கப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.


அணி சேரா நாடுகளின் உச்சி மாநாடு ஈரான் தலைநகர் தெஹ்ரானில் தொடங்கியது. இதில் அமெரிக்காவின் எதிர்ப்பை மீறி ஐ.நா. பொதுச்செயலர் பான்கீமூன் (இடது) கலந்து கொண்டார்.

## உலகச் செய்திகள்

# உடல் காயங்களை குணப்படுத்த ஸ்பிரே மருந்து கண்டுபிடிப்பு

(நியூயோர்க்)

உடலில் ஏற்படும் காயங்களை மருந்து போட்டு குணப்படுத்தி வருகின்றனர். ஆனால் ஸ்பிரே மூலம் மருந்து தெளித்து குணப்படுத்தும் நவீன முறை தற்போது கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஸ்பிரே மருந்து நெகிழும் தன்மை கொண்டது.

இதைக் காயக் கட்டின்மீது தெளித்தால் போதும். அது 5 நிமிடங்களில் அதன் மீது செட் ஆகிவிடும். இதன் மூலம் பல் மற்றும் எனாமலில் ஏற்பட்ட காயங்களையும் குணப்படுத்த முடியும். அதில் கல்சியம் இருப்பதால் பல் நோய்களும் குணமாகின்றன. இந்த ஸ்பிரே மருந்து காயத்துடன் ஒட்டாத வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. குணமடைந்தவுடன் காய கட்டு பிரிக்கும் போது அதுவும் அத்துடன் அகன்று விடும். இந்த மருந்து பரிசோதிக்கப்பட்டதில் 90 சதவீதம் நோயாளிகள் குணமடைந்துள்ளனர். அமெரிக்காவின் லோமாலிண்டா பல்கலைக்கழகத்தில் குழந்தகளின் இருதய அறுவை சிகிச்சை காயங்களை குணப்படுத்த ஸ்பிரே மருந்து பரிசோதித்து சோதனை நடத்தப்பட்டது.

அமெரிக்க ராணுவ இன்ஸ்டிடியூட் எப் சர்ஜிகல் ஆராய்ச்சி மையத்தில் தீக்காயங்களுக்கு சிலிகான் ஸ்பிரே மருந்து சிகிச்சை அளித்து பரிசோதிக்கப்பட்டது. அவற்றிலும் நல்ல முன்னேற்றம் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

# விமான விபத்தில் காணமல்போன பொதி 46 ஆண்டுகளின் பின்னர் மீட்பு

(ஜெர்னோபிள்)

கடந்த 1966ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதி மும்பையில் இருந்து நியூயோர்க் சென்ற ஏர் இந்தியாவின் போயிங்-707 என்ற பயணிகள் விமானம், பிரான்ஸில் விபத்துக்குள்ளானது. மேற்கு ஐரோப்பாவின் மிகப்பெரிய மலைத்தொடரான ஆல்ப்ஸ் மலைத்தொடரில் விமானம் விழுந்து நொருங்கியதால், அதில் பயணம் செய்த 117 பேரும் இறந்தனர்.

இந்த விமானத்தில் இந்திய தூர்தரகம் மற்றும் வெளியுறவு அமைச்சகத்தின் கடிதங்கள் அடங்கிய பொதி இருந்தது. அந்தப் பொதிக்கு என்ன ஆனது என்பது இதுவரை தெரியாமல் இருந்தது.


இந்நிலையில் அந்தப்பொதி ஆல்ப்ஸ் மலைத்தொடரின், மவுன்ட் பிளாங்க் என்ற இடத்தில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மீட்பு பணியாளர் அர்னார்டு கிறிஸ்ட்மேன் மற்றும் அவரது பக்கத்து வீட்டுக்காரர் ஜூல்ஸ பெர்ஜர் ஆகியோர் கடந்த 21ஆம் திகதி அந்தப் பொதியைக் கண்டெடுத்துள்ளனர்.




இதுபற்றி கிறிஸ்ட்மேன் கூறுகையில், அப்பகுதிக்கு சென்ற சுற்றுலாப் பயணிகள் சிலர் அங்கு பனிப்பாறையில் பளபளப்பான ஒரு பொருள் இருப்பதாக கூறினர். இதையடுத்து அங்கு சென்று பார்த்தபோது விமானத்தின் பாகங்கள் கிடந்தன. சற்று தூரத்தில் ஈரமான நிலையில் அந்தப்பொதி இருந்தது. அந்த பொதியை யாரோ ஒருவர் வைதது விட்டு சென்றது போல் அப்படியே இருந்தது. அந்தப் பொதியில் விலை உயர்ந்த வைரமோ, தங்கமோ இருக்கலாம் என்ற நம்பிக்கையில் திறந்து பார்த்தோம். ஆனால் அதில் ஈரமான நிலையில் அரசு கடிதமும், இந்திய செய்தித் தாள்களும் இருந்தன என்றார்.

இந்த தூதரக பொதி, மலையடிவாரத்தில் உள்ள சாமோனிக்ஸ் பொலஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது பற்றி தக்வல் தெரியவில்லை என்றும், அந்தப்பொதி கிடைக்கப் பெற்றதும் ஆய்வு செய்யப்படும் என்றும் பாரிஸ் நகரில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்; ஒபாமாவை எதிர்த்து ரோம்னி போட்டி



(தம்பா)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நவம்பர் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதில், ஜனநாயகக் கட்சி வேட்பாளராக ஜனாதிபதி ஒபாமா மீண்டும் போட்டியிடுகிறார். எதிர்க்கட்சியான குடியரசு கட்சி வேட்பாளரைத் தேர்வு செய்வதற்காக புளோரிடா மாகாணம் தம்பாவில் அக்கட்சியின் தேசிய மாநாடு நடைபெற்று வருகிறது. அதில், கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக மிட் ரோம்னி முறைப்படி தேர்ந்தெடுக்கப் பட்டார்.

வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தேவையான 1,144 பிரதிநிதிகளின் ஆதரவு அவருக்குக் கிடைத்தது. மாநாட்டில் ஏற்புரை நிகழ்த்திய பிறகு, ரோம்னியின் தேர்வு அதிகாரப் பூர்வமாகி விடும். அதன்பிறகு தான், தேர்தல் நிதியை அவர் செலவழிக்க முடியும். 65 வயதான மிட் ரோம்னி, மசாசுசெட்ஸ் மாகாண கவர்னராக இருந்தவர் ஆவர். இந்த மாநாட்டில், துணை ஜனாதிபதி வேட்பாளராக பால் ரியான் தேர்வு செய்யப்பட்டார்.

# பயணிகள் விமானம் கடத்தல்?

(போலந்து)

போலந்து நாட்டு விமானத்தை பயணிகளுடன் தீவிரவாதிகள் கடத்தி விட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. ஆம்ஸ்டராமில் உள்ள விமானத்தில் தீவிரவாதிகள் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.போலந்து இராணுவ வீரர்கள் விமானத்தைச் சுற்றி வளைத்துள்ளனர். ஸ்பெயின் நாட்டின் மலகா நகரிலிருந்து வந்த விமானத்தை பயணிகளுடன் கடத்திவிட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# அமெரிக்காவில் "ஐசக்" புயல் இயல்பு நிலை பாதிப்பு



(ஹுஸ்டன்)

அமெரிக்காவில் மையம் கொண்டுள்ள, ஐசக் சூறாவளிப் புயலின் காரணமாக லூசியானா மாகாணம் இருளில் மூழ்கியுள்ளது. அமெரிக்காவின் தென் பகுதியில் உள்ள மிசிசிப்பி, லூசியானா மற்றும் அலபாமா உள்ளிட்ட மாகாணங்களில் , ஐசக் புயல் மையம் கொண்டுள்ளது. இதன் காரணமாக, 130 கி.மீ.,வேகத்தில் கடும் சூறைக் காற்று வீசி வருகிறது. கடந்த 2005ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29ஆம் திகதி, கத்ரினா புயல் தாக்கியதில், நியூ ஆர்லியன்ஸ் மாகாணத்தில், 18 ஆயிரம் பேர் பலியாயினர். கத்ரினாவை போன்ற சக்தி வாய்ந்த புயல் மீண்டும் அமெரிக்காவை தாக்கியுள்ளதால், இம்மாகாணங்களில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். லூசியானாவின் கவர்னரான, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பாபி ஜிண்டால், குடியரசுக் கட்சி மாநாட்டு வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, புயல் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

கடும் சூறாவளியால், மின் இணைப்புகள், துண்டிக்கப்பட்டுள்ளன் இதனால், லூசியானா மாகாணம் இருளில் மூழ்கியுள்ளது. பலத்த மழை பெய்து வருவதால், பல இடங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

# வீட்டுத்தோட்டப் போட்டி கிளிநொச்சியில் புதிய திட்டம்



(கிளிநொச்சி)

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டுக்கான வீட்டுத்தோட்டப் போட்டிகள் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீட்டுத் தோட்டப் போட்டிகள் கிரா்ம வீட்டுத்தோட்டம், பாடசாலைத்தோட்டம், மாணவர் வீட்டுத்தோட்டம், அலுவலகத் தோட்டம், அலுவலர் வீட்டுத்தோட்டம் எனும் ஐந்து பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு நடத்தப்படும்.

ஒவ்வொரு வகையான வீட்டுத்தோட்டங்களுக்கும் போட்டியாளர்கள் விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியில் தனித்தனியாக மதிப்பிடப்பட்டு முதலிடத்தை வகிக்கும் போட்டி யாளர்கள் மாவட்ட மட்டப்போட்டியில் பங்குகொள்ள முடியும். ஒவ்வொரு வகையிலும் மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொள்ளும் வெற்றியாளர்களுக்குப் பெறுமதியான பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் போட்டியாளர்கள், அலுவலகங்கள், பாடசாலைகள் தங்கள் பகுதிக்கான விவசாயப் போதனாசிரியரிடமோ அல்லது கிளிநொச்சி மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி (021228 5726 அல்லது 0772148755) மூலமாகவோ தொடர்புகொண்டு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வெற்றியாளர்கள் தெரிவின் போது திட்டமிடப்பட்ட பயிர்ச் செய்கை, மண் பாதுகாப்பு முறைகள், சேதனப் பசளைப்பாவனை, இயற்கை முறை பீடைக் கட்டுப்பாடு, போசாக்கு உணவு உற்பத்தி, மிகை உற்பத்திகளைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகள், ஒருங்கிணைந்த பயிர் விலங்கு வேளாண்மை போன்ற பல விடயங்கள் கருத்திற் கொள்ளப்படும். (28)

## இலங்கை...

தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த மூன்று வருடங்களில் வடபகுதியில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக சர்வதேச சமூகம் புரிந்து கொண்டுள்ளதுடன், இவ் விடயத்தில் திருப்தியும் தெரிவித்துள்ளனர்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரலாற்றில் ஒருபோதும் இடம்பெறாத வகையில், ஏராளமான இராஜதந்திரிகள் தற்போது இலங்கைக்கு வருகை தந்த வண்ணமுள்ள னர். கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் மூன்று நாடுகளின் உயர்மட்டத் தலை வர்கள், இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். வெளிநாட்டு அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட தலைவர்கள் வட பகுதிக்குச் சென்று அங்கு இடம்பெற்று வரும் அபிவிருத்திகளை நேரடியாக அவதானித்துள்ளனர். அவர்கள், கடந்த மூன்று வருடங்களில் இதுபோன்ற துரிதமான அபிவிருத்திகள், உலகில் எந்தவொரு நாட்டிலும் இடம்பெறவில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

சீஷெல்ஸ் ஜனாதிபதி, பிரிட்டனின் நேஸ்பி பிரபு, அத்துடன் பிரிட்டனிலிருந்து வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்தியாவின் முக்கிய அமைச்சர்கள் ஐவர், கொழும் புக்கு வருகை தந்துள்ளனர். அவர்கள் எமது நாட்டின் நிலைமையை ஆராய்ந்து, தங்கள் நாட்டுக்கு எடுத்துரைத் துள்ளனர். அதன் மூலம் வெளிநாடுகள் நமது நாடு தொடர்பாக வைத்திருந்த தப்பான அபிப்பிராயம் மாற்றமடைந்துள்ளது.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கு பொறுப்பான அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் றொபேட் ஓ பிளேக், மிக விரைவில் கொழும்புக்கு வருகை தரவுள்ளார். பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா, கொழும்புக்கு வருகை தரவுள்ளார். சீனா மற்றும் ரஷ்யாவின் உயர்மட்டத் தலைவர்களும் விரைவில் வருகை தரவுள்ளனர்.என்றும் அவர் தெரிவித்தார்.

# கல்லுடைக்கும் தொழிற்சாலையால் கிராம மக்கள் பாதிப்பு

ஏ-9 சாலையிலுள்ள அரசன் குளம் மக்கள் அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கருங்கல் உடைக்கும் தொழிற்சாலையின் கழிவுகளால் பாதிக்கப்பட்டு வருவதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள புகையிரத நிலைய களஞ்சிய சாலையாக இந்தத் தொழிற்சாலை தொடர்ச்சியாக இயங்குவதால் இங்கிருந்து வெளிவரும் கருங்கற்களின் தூசிகள் கிராம மக்களுக்கு பலத்த அசௌகரியங்களை ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக உயரதிகாரிகளுக்கு தொழிற்சாலையை இடமாற்ற முடியாதென்றும் மாறாக கிராம மக்களை பிறிதொரு இடத்தில் குடியேற்ற நடவடிக்கை எடுக்கலாம் எனவும் அதிகாரிகள் தெரிவித்தாக மக்கள் கூறுகின்றனர்.

1990 களில் இடம்பெயர்ந்த இந்தக் கிராமங்களில் தற்போது 48 குடும்பங்கள் வரை மீள்குடியேறியுள்ளனர். இந்தக் கிராமத்திலுள்ள தற்காலிக வீடுகளும், மலசல கூடங்களும் இதுவரை சீரான முறையில் தமக்கு கிடைக்கவில்லை எனவும் இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவர்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகள் நியாமாக முடிவெடுக்க அக்கறை செலுத்த வேண்டும் எனவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (28)

## அவுஸ்ரேலியா...

இவ்வாறு படகு மூலம் அவுஸ்ரேலியாவுக்குப் புறப்பட்டுச் சென்றிருப்பதாகக் கூறும் அவர்கள், சில வர்த்தகர்கள் நகரில் பலரிடம் கடன் வாங்கிவிட்டுத் தப்பிச் சென்றிருப்பதாகவும் தெரிவித்தனர்.

20 இலட்சம் ரூபா சீட்டுக் கட்டிவந்த வர்த்தகர் ஒருவர் அண்மையில் அதிக கழிவுடன் சீட்டுப் பணத்தைப் பெற்றுக்கொண்டு மாதாந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்தாமல் அவுஸ்ரேலியாவுக்குப் புறப்பட்டுச் சென்றிருப்பதாகவும் கிளிநொச்சி வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

நகரின் மத்தியிலுள்ள மற்றுமொரு வர்த்தக நிலையத்தில் பெருந்தொகைக் கடனுக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்து வியாபாரம் செய்து வந்த இந்த வர்த்தகர், அந்த மொத்த வர்த்தகருக்குச் செலுத்தவேண்டிய பணத்தையும் செலுத்தாமல், சீட்டுப் பணத்தையும் எடுத்துக்கொண்டு படகு மூலம் அவுஸ்ரே லியாவுக்குப் புறப்பட்டுவிட்டதாகவும் மேலும் குறிப்பிட்டார்.

இந்தோனேஷியாவுக்கு அருகில் அகதிகள் படகு ஒன்று மூழ்கிய செய்தி பத்திரிகையொன்றில் வெளியானதையடுத்து, கிளிநொச்சிப் பகுதியில் பலர் இந்தப் பத்திரிகைச் செய்தியைப் பரபரப்பாகப் பார்த்ததை அவதானிக்க முடிந்ததாகக் கூறும் அவர், படகு மூலம் அவுஸ்ரேலியாவுக்குப் புறப்பட்டுச் சென்றிருப்பவர்களின் உறவினர் மற்றும் நண்பர்களே இவ்வாறு இந்தச் செய்தியை அறிந்து பதற்றமடைந்திருப்பதாகவும் மேலும் தெரிவித்தார்.

## அன்னதான....

அடிபட்டுள்ள நிலையில் செஞ்சிலுவைச் சங்க அம் புலன்ஸ் மூலம் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை, பிறிதொரு அன்னதான மடத்தில் சனக்கூட்டத்தில் நசுங்கி கீழே விழுந்த பெண்மணி ஒருவர் கை உடைந்த நிலையில் வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இதில் இந்திரா (வயது-53) என்பவரே கை முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (05,116)

## நீதிமன்ற...

வழக்குச் சட்டமா அதிபரின் அறிக்கையை எதிர்பார்த்து செப்ரெம்பர் 21 ஆம் திகதி நீதிபதி ஆனந்தராஜாவின் முன்னிலையில் விசாரணைக்கு வரவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஆடியபாதம் வீதியில் காத்திருக்கிறது ஆபத்து

(திருநெல்வேலி)

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் உள்ள ஆபத்து மிக்க வாய்க்கால் பற்றி நேற்று முன்தினம் நடைபெற்ற நல்லூர் பிரதேசசபைக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இவ்வாய்க்காலுக்கான பாதுகாப்பு அரண் இல்லாத காரணத்தினால் இதுவரை இதற்குள் இருபதுக்கு மேற்பட்ட வாகனங்கள் விழுந்து பலர் படுகாயங்களுக்குள்ளானதாகவும், இதற்கான பாதுகாப்பு அரண் போடப்படுவது அவசியமானது எனவும் சபையின் உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

கொக்குவில் அம்மன் கோவில் வீதியிலிருந்து கொக்குவில் சந்தி வரை ஆடியபாதம் வீதியின் வடக்குப் புறமாகக் காணப்படும் இவ்வாய்க்கால் ஆழமானதாகவும், பற்றைகள் நிறைந்ததாகவும், குப்பைகளுடனும் காணப்படுகின்றது. இவ்வாய்க்காலுக்கான பாதுகாப்பு அரண் போடப்படுவது குறித்துப் பொது மக்கள் பலரினால் பல தடவைகள் வேண்டுகோள் விடுக்கப்பட்டும் அதனால் பலன் எதுவும் இதுவரை கிட்டவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்க்கால் பற்றி வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் கலந்தாலோசித்து விட்டு இது பற்றிய முடிவைச் சபையில் அறிவிப்பதாக நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப. வசந்தகுமார் தெரிவித்துள்ளார். (137)

# சுன்னாகக் கிணறுகளில் எண்ணெய்க் கசிவுகள்

சுன்னாகத்திலுள்ள பல குடிநீர்க் கிணறுகளில் உள்ள நீரில் எண்ணெய்க்கசிவுகள் கலந்துள்ளது தெரியவந்துள்ளது. சுன்னாகத்திலுள்ள இலங்கை மின்சார சபையின் மின் உற்பத்தி நிலையம் மூலமே இக்கசிவு ஏற்பட்டுள்ளதாகத் ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மக்களின் குடிநீர்க் கிணறுகளில் எண்ணைக்கழிவுகள் கலந்துள்ளதாக பொது மக்கள் தெரிவித்த புகாரின் அடிப்படையில் இதற்கான ஆய்வுகளை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை மேற்கொண்டது. இவ் ஆய்வின் போது காணியொன்றில் கழிவு எண்ணெய் பாரிய அளவில் தேங்கி நின்றதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இரண்டாம் கட்ட ஆய்வுகளை வலி.தெற்கு பிர தேச சபையின் கோரிக்கையில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை மேற்கொண்டு வருகின்றது.

# கள்ளமரம் கடத்தல் தாராளம் பொலிஸ் கண்காணிப்பு தீவிரம்

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்குப் பகுதியில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மண் அகழ்வு நடவடிக்கைகள் மற்றும் மரங்கள் கடத்திச் செல்லப்படல் போன்ற நடவடிக்கைகளைக் கண்டறிவதில் பொலிஸார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக தென்மராட்சி மற்றும் வடமராட்சிப் பகுதிகளிலிருந்து உழவியந்திரங்கள், பாரவூர்திகள் போன்றவற்றில் அனுமதி இன்றி மணல் அகழ்ந்து எடுத்துச் செல்வதைத் தடை செய்யும் வகையில் யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பிரதான வீதிப்பகுதியில் விசேட பொலிஸ் குழுவினர் அதிதீவிரக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, இவ்வீதிவழியாக சட்டவிரோதமாக விறகிற்காகவும், தளபாடத்தேவைக்காகவும் மரங்கள் தறித்துக் கொண்டு செல்வதையும் பரிசோதித்து வருவதுடன், இவ்வாறு குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டும் வருகின்றது. இவ்வாறு திடீர் திடீரெனப் பொலிஸார் மேற்கொண்டு வரும் அதிரடி நடவடிக்கைகளினால் சட்டவிரோத மண் அகழ்வு மற்றும் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவோரின் கள்ளத்தனமான செயற்பாடுகள் அண்மை நாட்களில் குறைந்திருப்பதாகவும் தெரிய வருகின்றது. (03)

## சட்டவிரோத மதுபானம் கடத்தியவர்கள் கைது

(கரணவாய்)

நெல்லியடிப் பகுதியில் சட்டவிரோதமாக முச்சக்கர வண்டியில் எடுத்துச் செல்லவிருந்த வெளிநாட்டு மதுபான வகையான 250 பியர் டின்கள் மற்றும் 200 போத்தல் சாராயமும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த பகுதியிலிருந்து மேற்படி சாராய வகைகளை மூன்று நபர்கள் முச்சக்கர வண்டியில் வல்வெட்டித்துறைக்கு எடுத்துச் செல்ல முற்பட்டபோதே பொலிஸார் இவர்களைக் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி மூன்று நபர்களுக்குமாக 50 ஆயிரம் ரூபா அபராதம் வழங்கித் தீர்ப்பளித்தார். சாராய வகைகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டது. (18)

## விதிமுறை...

கியது. இந்த அமர்வின் போது உள்ளூராட்சி மன்றங்களின் அதிகார வரம்புகளைத்தாண்டி, விதிமுறைகளுக்கு மாறாக அரச நிர்வாக அதிகாரியான பிரதேச சபையின் செயலாளருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆளுங்கட்சியினரால் கொண்டு வரப்பட்டது.

இந்தத் தருணத்தில் மேற்படி பிரேரணைய்யக் கொண்டு வருவதற்கு பிரதேசசபைக்கு அதிகாரம் இல்லை என்றும் அரச நிர்வாக அதிகாரிகளைக் கட்டுப்படுத்துவதற்கோ அல்லது அவர்களது நிர்வாக விதிமுறைகளில் தலையீடு செய்வதோ முறையற்றது என்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதுடன் சபை அமர்வில் இருந்தும் வெளிநடப்புச் செய்தனர். இதனால் சபை அமர்வு கூச்சல் குழப்பத்துடன் முடிவடைந்தது.

# பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் மூன்றரை இலட்சம் ரூபா கடனாளி

(சிகரம் செய்திகள்)

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கவுள்ள 9 பில்லியன் யூரோ நிதியுதவி மூலம் இலங்கையின் ஒவ்வொரு குடிமகனும் 67,500 ரூபா கடனாளியாகவேண்டி ஏற்படும் என்று தெரிவித்த ஆய்வாளர் உதயகுமார், இனிப் பிறக்கப்போகும் ஒவ்வொரு குழந்தையும் மூன்றரை இலட்சம் ரூபா கடனாளியாகவே பிறக்கப்போகிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

டான் தொலைக்காட்சியின் பத்திரிகைப் பார்வை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இந்தக் கடனுதவி பற்றிக் கருத்துத் தெரிவித்த அவர், இந்த நிதியை ரூபாவில் பிரித்து இலங்கையின் மக்கள் தொகைப்படி பார்த்தால் ஒவ்வொரு குடிமகனும் 67.500 ரூபா கடனாளியாவான் என்பது தெரிய வரும் என்று சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் மற்றும் யுனிசெவ் ஆகிய ஐக்கிய நாடுகள் அமைப்பின் முகவர் நிறுவனங்களூடாக ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு 9 பில்லியன் ரூபா நிதியுதவியினை வழங்கவுள்ளதாகவும், மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த உதவி வழங்கப்படவுள்ளதாகவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தச் செய்தி தொடர்பில் தனது கருத்துக்களைப் பகிர்ந்த உதயகுமார், இவ்வாறான கடனுதவி பற்றிய செய்திகள் கிடைத்ததும் வெறுமனே தகவல்களாக அவற்றை வழங்கும் தமிழ் ஊடகங்கள், இவைபற்றி மேலும் ஆய்வு செய்து, இந்தக் கடன் எந்த அடிப்படையில் வழங்கப் படவிருக்கிறது, இதனால் இலங்கையின் கடன்சுமை எவ்வாறு அதிகரிக்கும், இது ஒவ்வொரு குடிமகனையும் எந்தளவு கடனாளியாக்கும் என்பதுபற்றியெல்லாம் சிந்திப்பதில்லை என்று குற்றஞ்சாட்டினார்.

இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்படவுள்ள இந்த 9 பில்லியன் யூரோ கடனுதவியினால் இலங்கையின் ஒவ்வொரு குடிமகனும் கடனாளியாவார் என்று குறிப்பிட்ட அவர், பிறக்கப்போகும் ஒவ்வொரு குழந்தையும் 67,500 ரூபா கடனுடனேயே பிறக்கும் என்றும் தெரிவித்தார்.

ஏற்கனவே இலங்கை பட்ட கடனால் ஒவ்வொரு குடிமகனும் இரண்டரை இலட்சம் ரூபா கடனாளியாகியிருப்பதாகக் குறிப்பிட்ட அவர், இனிப் பிறக்கப் போகும் ஒவ்வொரு குழந்தையும் மூன்று இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான கடனுடனேயே பிறக்கும் என்றும் தெரிவித்தார்.

எனவே இவ்வாறான கடனுதவிகள் குறித்து விரிவாக ஆராய்ந்து மக்களுக்கு இதுபற்றித் தெளிவூட்டவேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கு இருக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.



கரவெட்டி தெற்கு மேற்கு பிரதே சபையின் தவிசாளர் செல்வச்
நிதி கோயிலுக்கு தனது சொந்த வாகனத்தில் தன்னுடைய உறவி
களுடன் வரும் பொழுது றொட் கழன்று மின்சாரக் கம்பத்தில் மோ
ண்டு வாகனம் பலத்த சேதமடைந்துள்ளது. பயணம் செய்த
களுக்கு சிறு காயம் ஏற்பட்டு மந்திகை வைத்தியசாலையில் அனுமதி
கப்பட்டுள்ளனர்.

# ஜனாதிபதியின் வேண்டுகோளில் மிருக பலி பூஜை நிறுத்தம்



(கொழும்பு)

ஜனாதிபதியின் வேண்டுகோளின் காரணமாக முன்னேஸ்வரம் காளி கோவிலில் மிருக பலி பூஜையை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முன்னேஸ்வரம் காளி கோவிலின் பிரதம குருவான சிவபாத சுந்தரம் தெரிவித்துள்ளார்.

நாளை இம்மிருக பலி பூஜை நடத்தப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுக் காலை கூடிய முன்னேஸ்வரம் காளி கோவில் நிர்வாக சபையினர் இந்த முடிவை எடுத்ததாகவும், வருடாந்தம் இடம்பெற்றுவரும் மிருக பலி பூஜையினை ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில் இவ்வருடம் மாத்திரம் நிறுத்துவதென முடிவு செய்ததாகவும் அவர் தெரிவித்தார்.

புத்தர் பெருமானின் கபில வஸ்து புனிதச் சின்னங்கள் காட்சிக்கு வைக்கப்படும் காலத்தில், மிருக பலி பூஜை வேண்டாம் என ஜனாதிபதி கோரிக்கை விடுத்திருந்தார்.

# ஸ்ரீலங்கா மு.கா. கட்சியின் பெண் ஆதரவாளர் மீது தாக்குதல்



(மட்டக்களப்பு)

ஏறாவூர் பிரதேசத்தில் இரண்டு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு இடையில் நேற்றுக் காலை இடம்பெற்றதாகக் கூறப்படும் மோதலில் இரண்டு பெண்கள் பாதிக்கப்பட்டு ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் பிரதேசத்திலுள்ள ஐயங்கேணி கிராமத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட தலைமை வேட்பாளர் நசீர் ஹாபீசிற்கு ஆதரவு தேடி பெண் ஆதரவாளர்கள் வீடு வீடாக பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மற்றுமொரு அரசியல் கட்சியின் வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளர்கள் இப்பெண்க
தாக்கியுள்ளனர்.

இதையடுத்து சம்பவத்
பாதிக்கப்பட்ட இரண்டு பெ
கள் ஏறாவூர் வைத்தியசா
யில் அனுமதிக்கப்பட்டுள்ள
ஏறாவூர் பொலிஸார் தெரி
தனர்.

# ஒரு இலட்சம் தொன் அரிசி ஏற்றுமதி

ஒரு இலட்சம் தொன் அரிசியை துபாய் நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இதுவரை 500 கொள்கலன்களில் அரிசி அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இலங்கை வரலாற்றில் முதற் தடவையாகவே இந்தளவு அரிசி ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் மேலும் பல நாடுகள் இலங்கையில் இருந்து அரிசியை கொள்வனவு செய்ய முன்வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஏற்பாடு செய்துள்ள ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர் 2 மாதத்தினுள் 4 ஆயிரம் கொள்கலன்களில் அரிசி அனுப்பத் திட்டமிடப்பட்டது.

ஆனால் அரிசி ஆலைகளில் போதுமான நவீன தொழில்நுட்ப வசதிகள் இல்லாத நிலையில் துரிதமாக அவற்றை வழங்க முடியவில்லை. இதனால் அரிசி ஆலைகள் நவீன தொழில் நுட்பங்களுடன் முன்னேற்றப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.


## தேவை

### வன்னிப் பிரதேச செய்தியாளர்கள்

**1. கிளிநொச்சி 2. அக்கராயன் 3. பூநகரி 4. முள்ளியவளை 5. முல்லைத்தீவு 6. மல்லாவி 7. துணுக்காய் 8. விசுவமடு 9. மாங்குளம், 10. கனகராயன்குளம், 11. புளியங்குளம் 12. நெடுங்கேணி, 13. வவுனியா 14. மன்னார், 15. மடு**

ஆகிய பிரதேசங்களிருந்து தினமுரசு பத்திரிகைக்குச் செ
யாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு சிகரம் ஊடக இல்லத்
ஊடாக,

1. செய்தி சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல்
2. விற்பனை ஊக்குவிப்பு
3. விளம்பர சேகரிப்பு


ஆகிய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்பட்டு, அதிக
வருமானம் பெற வழிகாட்டப்படுவதுடன், தேர்ச்சி பெறுபவர்
நிரந்தரப் பணியாளர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவ

- ➪ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
- ➪ க.பொ.த. சாதாரணதரம் வரையில் படித்த ஆண், பெ
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிப
கோவையுடன், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் கொ
மைக்கான காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணை
பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்க

**வன்னிப் பிரதேச செய்தியா**
**தினமுர**
**373, பிரதான வீதி, யாழ்ப்பாண**


# சிறப்பாக இடம்பெற்ற தேர்த்திருவிழா



படங்கள்
02, விசிந்தன்

(வடமராட்சி)

அன்னதானக் கந்தன் என அழைக்கப்படும் தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த தேர் உற்சவம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் புடைசூழ வெகு சிறப்பாக நடைபெற்றது.

சந்நிதிவேலன், பிள்ளையார், ஆறுமுகக் கந்தன் ஆகிய 3 சுவாமிகளும் 3 தேரில் ஆரோகணிக்கும் காட்சி பக்தர்களை பக்திப் பரவசத்தில் ஆழ்த்தியது.

இதில் நாலாதிசைகளிலிருந்தும் இலட்சோப இலட்ச மக்கள் வருகைதந்ததுடன் 100 இற்கும் மேற்பட்ட தூக்குக் காவடிகள், பறவைக் காவடிகள், பால் காவடிகள் என்பன வந்து சேர்ந்தன.

அத்துடன் சந்நிதிவேலனின் தேருடன் பல அடியார்கள் அங்கப் பிரதட்சணை, அடியழித்தும் தமது நேர்த்திக் கடன்களைச் செய்தனர்.

மேலும் சந்நிதியான் ஆலயச் சூழலில் உள்ள அ
த்து அன்னதான மடங்களிலும் அடியார்களுக்கு உ
ளிக்கப்பட்டது.

பிற்பகல் 2.00 மணியளவில் தேரில் சண்முக
சனை இடம்பெற்று மூர்த்திகள் பச்சைசார்த்தி
மண்டபத்தை சென்றடைந்தன. இதில் பக்தர்களின்
ஹரா கோஷங்களும் நேர்த்திகளும் மெய்சிலிர்ப்ப
அமைந்திருந்தது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஆகஸ்ட் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்ப